# ஈழநாதம்

EELANATHAM

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் - 08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | கார்த்திகை - 03 | 19-11-2003 | புதன்கிழமை | ஓசை 274



தொழில் நுட்பத்தில் ஒருமணி நேரத்திற்குள் கழுவிப் பெற்றுக் கொள்ள

பொற்காலம் வண்ணக் கலையகம்

MILLENNIUM COLOUR LAB
Video, Audio & Studio

மேலும் வீடியோ புகைப்பட சேவைகள்,
கணினி முறை வீடியோ மிக்சிங்,
பாடல் பதிவுகள்,
படம் பிறேம் செய்தல்
அனைத்திற்கும் பொற்காலம்
வண்ணக்கலையகம்

யாழ் சாலை,
கிளிநொச்சி. (ச-8689)

R.V.
பந்தல்சேவை
தர்மபுரம்.


# சனாதிபதி - பிரதமரிடையே இணக்கமான நிர்வாகத்தை அமைக்கக்குழுவொன்று நியமனம்

## நேற்று இடம்பெற்ற சந்திப்பில் இணக்கம்

(கொழும்பு)

**தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகள் குறித்து சனாதிபதியும் பிரதமரும் ஒன்றிணைந்து செயற்படக்கூடியவகையிலும் இணக்கமாக நிர்வாகம் ஒன்றை முன்னெடுத்துச் செல்லும் வகையிலும் எதிர்காலச் செயற்றிட்டங்களை வகுக்க நான்கு பேரடங்கிய குழுவொன்று நேற்று அமைக்கப்பட்டுள்ளது.**

நேற்று சனாதிபதிக்கும் பிரதமருக்குமிடையில் சனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற சந்திப்பில் இதற்கான உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.

இக்குழுவில் சனாதிபதியின் செயலர் டபிள்யு ஜே.கருணாரத்ன, பிரதமரின் செயலர் பிரட்மன் வீரக்கோன் சனாதிபதியின் ஆலோசகர். மனோதிக்வெல ஐ.தே.கட்சியின் தவிசாளர் மலிக்சமரவிக்கிரம ஆகியோர் அடங்கியுள்ளனர்.

இக்குழு நடைமுறை அரசியல் சிக்கலை நீக்கி சனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில்இணக்கமான நிர்வாகம் ஒன்றை முன்னெடுத்துச் செல்வதற்கான பரிந்துரையை இரண்டு வாரங்களுக்குள் சமர்ப்பிக்கும். இதன்பின்னர் மீண்டும் சனாதிபதியும் பிரதமரும் சந்திப்பை மேற்கொள்ளவுள்ளனர்.

இதேவேளை நேற்று சனாதிபதிக்கும் பிரதமருக்குமிடையே

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.மு. பா.உ.களை ரணில் நேற்று சந்திப்பு

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று சனாதிபதியைச் சந்தித்த பின்னர் ஐ.தே. முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பிற்பகல் பிரதமர் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது சனாதிபதியுடன் நடத்தியபேச்சுவார்த்தை குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு விளக்கமளித்தார்.

அதில் சமாதானம் தடைப்பட்டிருப்பதால் பொருளாதார வீழ்ச்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு உயர்சபை அமைக்க சனாதிபதி பரிந்துரை

### சரத் அமுனுகம தகவல்

போர்நிறுத்த உடன்பாட்டில் சனாதிபதியைத் தவிர்த்து தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க கையொப்பமிட்டமை சட்டரீதியற்றதாகும். இருந்த போதும் நாட்டு மக்களின் நலன் கருதியே அதற்கு எவ்வித எதிர்ப்பு நடவடிக்கையையும் சனாதிபதி மேற்கொள்ளவில்லை.என பொதுசன ஐக்கிய முன்னணியின் பேச்சாளர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

நேற்று கொழும்பில் ஊடக மாநாட்டை நடத்திய அவர், நடைமுறை அரசியல் நெருக்கடி தொடர்பில் கருத்தைக்கூறுகையில் சமாதான நடவடிக்கை நாடாளுமன்றத்தில் அதிக ஆசனத்தை கொண்டுள்ள பிரதமர் முன்னெடுக்க வேண்டும்.பாதுகாப்பு அமைச்சு சனாதிபதியினால் பொறுப்பேற்கப்பட்டுள்ளமையால் எழுந்துள்ள முறுகல்நிலையைத் தவிர்க்க பாதுகாப்பு உயர் சபை ஒன்று அமைக்கப்பட

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மத்தியஸ்தத்திலிருந்து நோர்வே விலகியது கவலைதருகிறது

### தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவிப்பு

நோர்வே அரசு மத்தியஸ்தத்திலிருந்து விலகியமையை ஆழ்ந்த கவலையுடன் நோக்கும் எமது சங்கம் சனாதிபதியின் அண்மைக்கால நடவடிக்கைகள் சமாதானத்தை பின்தங்கச் செய்தமையை வன்மையாகக் கண்டிக்கிறது என கிளிநொச்சி தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.நேற்று நடைபெற்ற மேற்படி சங்கக் கூட்டத்தின் பின் வெளியிடப்பட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

உடனடியாக சனாதிபதியும் பிரதமந்திரியும் இணக்கப்பாட்டிற்கு வந்து நோர்வேயின் மத்தியஸ்தத்துடன் பேச்சுவார்த்தைக்கு உடன்பட்டு விடுதலைப்புலிகளின் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை ஏற்று அமுல்படுத்தி நாட்டின் நிரந்தர சமாதானத்தை நோக்கிய முன்னெடுப்பை மேற்கொள்ள வேண்டு

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கொள்கலன்களில் கொழும்பு வந்த இரு வேவு விமானங்கள் கண்டுபிடிப்பு

கொழும்பு துறைமுகத்திற்கு வந்த கப்பலிருந்த கொள்கலனில் இரண்டு வேவு விமானங்கள் இருந்ததை சிறிலங்கா சுங்கத்துறையினர் கண்டுபிடித்துள்ளதாக அறிவித்துள்ளனர்.

54 அடி நீளமான இந்த விமானங்கள் வியட்நாமிலிருந்து கொழும்பிலுள்ள நிறுவனம் ஒன்றுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதில் ஒன்று ஜெற் ரகம் என்றும் இந்த விமானங்களில் நவீன ரக புகைப்படக் கருவிகளும் பொருத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (32)

## மாவீரர் தின வீதி வளைவுகளை அறுத்தெறிந்தசிறிலங்காப் படையினர்

### கோபமுற்ற மக்கள் மீண்டும் அமைத்தனர்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சியில் நுணாவில், சாவகச்சேரி, கைதடிப் பகுதிகளில் வர இருக்கும் மாவீரர் தினத்தை ஓட்டி வீதிகளில் மக்களால் கட்டப்பட்டிருந்த வீதி வளைவுகளை சிறிலங்கா இராணுவத்தினர் நேற்றுக் காலை அறுத்து வீசியுள்ளனர்.

இச்சம்பவத்தையடுத்து கோபமடைந்த மக்கள் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடமும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடமும் முறையிட்டுள்ளதோடு, இராணுவத்தினரின் இந்த அடாவடித்தனம் குறித்து தமது கண்டனத்தையும் தெரிவித்துள்ளனர். இம்முறைப்பாட்டையடுத்து கண்காணிப்புக் குழுவினரும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகளும் தென்மராட்சி இராணுவ அதிகாரியுடன் பேச்சுவார்த்தை நடத்தியபோது விடுதலைப்புலிகள் தொடர்பான நிகழ்வுகளை மக்கள் கொண்டாட அனுமதிக்க முடியாது எனக் கூறி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

22.04.1997 அன்று முல்லை மாவட்டத்தில் ஏற்பட்ட தவறுதலான வெடிவிபத்தின் போது விழுப்புண் அடைந்திருந்துபோராளி ஒருவர் நேற்று சுகயீனம் காரணமாக சாவடைந்துள்ளார்.

கப்டன் காண்டீபன் (சிவசுப்பிரமணியம் லோகேஸ்வரன் தம்பலகாமம் திருகோணமலை த.மு: 2ஆம் வட்டாரம் கோம்பாவில் புதுக் குடியிருப்பு) என்ற போராளியே சாவடைந்தவராவார்.

இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

## வரவு செலவுத் திட்டம் குறித்து கட்சித் தலைவர்கள் ஆராய்வு

ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்தின் மூன்றாவது வரவு செலவுத் திட்டம் இன்று பிற்பகல் 2.30ற்கு நிதி அமைச்சர் கே.என் சொக்ஸியினால் சமர்ப்பிக்கப்படவிருக்கிறது.இது தொடர்பில் நேற்று கட்சித் தலைவர்களின் கூட்டம் ஒன்று சபாநாயகர் யோசப் மைக்கல் பெரேராவின் தலைமையில் நடைபெற்றது.வரவு செலவுத் திட்டத்தின் 2ஆம் வாசிப்பு 6நாட்கள் இடம் பெறவிருக்கிறது.இதையடுத்து அமைச்சுக்களின் ஒதுக்கீட்டு விவாதம் 13 நாட்கள் நடைபெறவுள்ளது.இறுதியாக வாக்கெடுப்பு

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் மாவீரர் தின ஏற்பாடுகள் தீவிரம்

(வவுனியா செய்தியாளர்)

வவுனியாவில் மாவீர்தின ஏற்பாடுகள் தீவிரமடைந்துள்ளன. மாவீரர் தின நிகழ்வுகளை மிகச் சிறப்பாக அனுஷ்டிக்க பொது அமைப்புக்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளன.

எதிர்வரும் 21ஆம் திகதி தொடக்கம் 27ஆம் திகதிவரை வவுனியா நகரம்,சிதம்பரபுரம், செட்டிக்குளம்புதுக்குளம், ஆகிய பிரதேசங்களில் பிரதேச ரீதியாக மாவீரர்களின் பெற்றோர்களை கௌரவிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் தெரிவித்துள்ளார்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின்குரல் நாளை முதல் 27வரை தினமும் 17மணி நேர ஒலிபரப்பு

புலிகளின்குரலின் 13ஆம் ஆண்டு நிறைவு நாளான நாளை சிறப்பு ஒலிபரப்பாகக் காலை 5.00 மணி முதல் இரவு 10.00 மணிவரையும் தேசியத்தலைவர் அவர்களின் 49 ஆவது பிறந்த நாளாகிய 26.11.2003 அன்று அனேக மக்களின் வேண்டுதலுக்கிணங்க காலை 5.00மணி முதல் இரவு 10.00 மணிவரையும் 21ஆம் 22ஆம் ,23ஆம், 24ஆம் 25ஆம் நாட்களில் மாவீரர் நாளையொட்டியும் 27ஆம் நாள் மாவீரர் நாள் அன்றும் காலை 5.00 மணி முதல் இரவு 10.00 மணிவரையும் புலிகளின்குரல் வானொலியின் சிறப்பு ஒலிபரப்பு நடைபெறவுள்ளது.

## மாவீரர் நாள் நவம்பர்-27

"எமது வீரசுதந்திர வரலாறு மாவீரர்களின் இரத்தத்தாலும், வியர்வையாலும், கண்ணீராலும் எழுதப்பட்டிருக்கின்றது."

தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு வே. பிரபாகரன்அவர்கள்.

# கிழக்கில் தொடரும் மழையினால் பெருமளவிலான மக்கள் இடம்பெயர்வு

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் கடந்த மூன்று தினங்களாகத் தொடர்ந்து மழை பெய்து வருவதால் அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களிலுள்ள தாழ்நிலப் பிரதேசங்களிலிருந்து மக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கிச் செல்கின்றனர்.

பொத்துவில், நிந்தாவூர், அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, சாய்ந்தமருது கல்முனை பிரதேச செயலர் பிரிவுகளிலிருந்து வெள்ளம் காரணமாக மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.

இந்த காலநிலை காரணமாக மீனவர்கள் கடலுக்குச் செல்லவில்லை. விவசாயச் செய்கைகளும் பாதிக்கப்பட்டுள்ளன


## வரி விளம்பரம்

### விற்பனைக்குண்டு

நல்ல நிலையில் உள்ள மோட்டார் சைக்கிள் **C.D.** 185 மலிவு விலையில் **MD** 90, **ELF** 250 வான்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு அறிவமுது பொத்தகசாலை, யாழ். சாலை,கிளிநொச்சி. (3877)

### தவறிவிட்டது

கடந்த 14.11.2003 அன்று புளியங்குளத்திலிருந்து முல்லைத் தீவுக்கு பி.ப.5.30 மணிக்கு புறப்பட்ட பேருந்தில் 831804076v தே.அ.அ. தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் முல்லைத்தீவு குயிலோசை ஒலிப்பதிவுக்கலையகத்தில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும்.தகவல் வி.தமிழ்றாஜன், குயிலோசை ஒலிப்பதிவுக் கலையகம், முல்லை. (3880)

### விற்பனைக்கு

டாஸ் — 1ரக நாய்குட்டிகள் சிறந்தவை விற்பனைக்குண்டு,மற்றும் ஹொண்டா CD90ரகம், நல்ல நிலையில் உள்ள மோட்டார்சைக்கிள்விற்பனைக்குண்டு,49வேங்கை வீதி (டோசர் ஒழுங்கை) உதயநகர் மேற்கு, கிளிநொச்சி, தொடர்பு கொள்ளவேண்டிய நேரம் பி.ப 4.00 தொடக்கம் பி.ப 6.00மணி(சி.8717)

### தமிழீழ தேசப் படம்

தமிழர் மரபு வழித் தாயகப் படம சகல சிறு ஊர்களையும் குறித்த படி வர்ணத்தில் வெளிவந்துள்ளது. அனைத்து அறிவமுது பொத்தக சாலையிலும் கிடைக்கும். (சி-8805)

### வார செய்தித் தாள்கள்

தமிழ் அலை, செந்தணல், வீரகேசரி, தினக்குரல் மற்றும் சகல ஆங்கில வார இதழ்களும் அருகில் உள்ள அறிவமுது பொத்தகசாலை யில் கழிவுடன் கிடைக்கும் (சி-8806)


# பொதுத்தேர்தல் ஒன்று நடத்தப்பட்டால் பிரச்சினை மேலும் சிக்கலாகும்

## ல.ச.ச.கட்சி,கம்யூனிஸ்ட் கூட்டறிக்கை

பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத்தேர்தல் ஒன்றை நடத்தினால் தற்போதுள்ள பிரச்சினை மேலும் சிக்கல் நிலைக்குள்ளாகும் என லங்கா சமசமாஜக் கட்சி செயலாளர் பட்டி வீரக்கோன், கம்யூனிஸ்ட் கட்சியின் செயலர் டியு குணசேகர ஆகியோரின் கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.தே.முன்னணி பதவியேற்றவுடன் சனாதிபதியுடன்முரண் பாடின்றி சமாதான முறைமூலம் பிரச்சினைகளைத் தீர்க்கலாம் எனக் கூறியிருந்தாலும் அது செயல்வடிவம் பெறாமையே தற்போது தோன்றியிருக்கும் பிரச்சினைக்குக் காரணம் எனவும் அவ்வறிக்கை கூறுகிறது. அதற்குப்பரிகாரமாகவே தற்போது சனாதிபதியினால் முன் வைக்கப்பட்டுள்ள நல்லிணக்க கூட்டணி அமைவதாகவும் மூன்று சமூகத்தவர்களும் இதனை ஏற்பதாகவும் அந்த அறிக்கை தெரிவிப்பதுடன், நிறைவேற்று அதிகாரத்துக்கும் ஆளும் கட்சிக்கும் இடையே கடந்த இரு வருடங்களாக இருந்துவரும் முறுகல் நிலை தற்போது பாரிய அரசியல் பிரச்சினையாக மாறியிருப்பதாகவும் 2002ஆம் ஆண்டு புலிகளுக்கும் அரசுக்கு மிடையில் ஏற்படுத்தப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் குறைபாடுகள் இருப்பினும் நாட்டின் சமாதானம் கருதி அதனை தமது இரு கட்சிகளும் ஆட்சேபிக்கவில்லை எனவும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

தற்போதைய சூழ்நிலையிலும் விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினையைத் தீர்க்கலாம் என்றும் யுத்தத்துக்கு செல்வதில்லை. என்று கூறியுள்ளதையும் குறைத்து மதிப்பிடமுடியாது எனவும் தற்போது இரு பிரதான கட்சிகளும் இணைந்தே தீர்வுகாணவேண்டும் எனவும் அவ்வறிக்கைமூலம் இரு கட்சிச் செயலாளர்களும் தெரிவித்துள்ளனர்.

## கண்டெடுப்பு

சமதர்மராசா விதுசன் உண்ணாப்பிலவு முல்லைத்தீவு அ.அட்டை (இல.803205698v)எனும் முகவரி கொண்ட அடையாள அட்டையும் பராபரம் தர்சினி 4ஆம் வட்டாரம் முள்ளியவளை எனும் முகவரி கொண்டவரது நிரந்தர பயண அட்டையும் அடைவுத் துண்டுகள் அடங்கிய பேர்ஸ் கண்டெடுக்கப்பட்டு புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள த.போ கழகத்தில் உள்ளது.உரியவர்ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும். (26)

# வேலையற்ற பட்டதாரிகளின் போராட்டம் கைவிடப்பட்டுள்ளது

கொழும்பில் தொடர்ச்சியாக உண்ணாவிரதம் இருந்த வேலையில்லாப் பட்டதாரிகள் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வு கிட்டியதையடுத்து தமது போராட்டத்தை நேற்று முன்தினம் கைவிட்டுள்ளார்கள்.

நேற்று முன்தினம் காலை சனாதிபதி மாளிகையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வு கிடைத்துள்ளதையடுத்தே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக வேலையற்ற பட்டதாரிகள் கூட்டமைப்பின் ஏற்பாட்டாளர் சந்தனசூரிய கூறியுள்ளார்.

தொடர்ச்சியாக உண்ணாவிரதம் இருந்து வரும் பட்டதாரிகளின் நிலை பற்றி ஆராய்ந்து அவர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணும் படி சனாதிபதி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அண்மையில் பணிப்புரை விடுத்திருந்தார்.

இதற்கமைய முதலமைச்சர்கள் வேலையற்ற பட்டதாரிகள் சங்கப் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.

மாகாண சபைகளிலுள்ள வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளை உடனடியாக நிரப்புவதென முதலமைச்சர்கள் முடிவு செய்துள்ளனர்.

இதன்படி டிசம்பர் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் ஏற்கனவே அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள 1250பேர் பட்டதாரி ஆசிரிய வெற்றிடங்களுக்கு நிரப்புவதென்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

மத்தியரசாங்கத்தின் நிதி கிடைக்காது விட்டாலும் கூட இத்திட்டத்தை அமுல் செய்ய முதலமைச்சர்கள் இணக்கம் தெரிவித்துள்ளார்கள்.

எஞ்சியுள்ள வேலைவாய்ப்பு பட்டதாரி வெற்றிடங்களுக்கு அடுத்த ஆண்டு பெப்ரவரி மாத இறுதிக்கு முன்னர் பகிரங்க நேர்முகப் பரீட்சைகளை நடத்தவும் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.அத்துடன் பயிற்சியாளர்களாக பட்டதாரிகளை சேர்த்து அவர்களுக்கு பயிற்சியளித்த பின்னர் நிரந்தர நியமனங்களை வழங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

### ஈருருளி உந்துருளிகளில்

# சமாந்தரமாகச் செல்வோர் மீது தமிழீழ காவல் துறை நடவடிக்கை

(அலுவலக செய்தியாளர்)

வீதிப் போக்குவரத்துக்கு குந்தகம் ஏற்படுத்தும் வகையில் வீதிகளில் ஈருருளி, உந்துருளிகளில் சமாந்தரமாக செல்பவர்களை தமிழீழ காவல்துறைப் வீதிப்போக்குவரத்துப் பிரிவினர் கைது செய்து சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தி வருகின்றனர்.

பொறுப்பற்ற விதத்தில் வீதிகளில் மேற்படி சமாந்தரமாகச் செல்வதன் காரணத்தினால் வாகன ஓட்டுநர்கள் முதல், பாதசாரிகள் வரை பெரும் அளெகரியங்களுக்குள்ளாகி வருவதுடன் இதன் காரணமாக வீதி விபத்துக்கள் இடம் பெறுவதற்கு ஏதுவாக அமைவதன் காரணத்தினால் இவற்றைத் தடுக்கும் வகையில் காவல்த்துறை போக்குவரத்துப் பிரிவினர் மேற்படி நடவடிக்கையினைத் துரிதப்படுத்தி வருவதாக தெரிவித்துள்ளனர்.

கடந்த சில தினங்களாக கிளிநகரம் மற்றும் ஏ-9நெடுஞ்சாலையில் சமாந்தரமாக மேற்படி ஊர்திகளில் பயணித்தவர்களை கைதுசெய்து சட்டநடவடிக்கையின் பொருட்டு நீதிமன்றில் முற்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(சோ)

# இரவில் வெளிச்சத்துடன் மீன்பிடிக்க மீனவருக்குப் படையினர் உத்தரவு

இரவு வேளைகளில் கடற்றொழிலில் ஈடுபடும் மீன்பிடி வள்ளங்களில் வெளிச்சங்கள் பொருத்தப்பட்டிருக்க வேண்டும் என மண்டைதீவு மீனவர்களுக்குப் படையினர் உத்தரவிட்டுள்ளனர்.

மேற்படி மண்டைதீவு கடற் பிராந்தியத்தில் இரவு நேர கடற்றொழிலில் ஈடுபடுவோர் எக்காரணம் கொண்டும் அதிகாலை 4.00 மணிக்கு முன்பதாக கரை திரும்பக்கூடாது எனவும், மாறாகக் கரைதிரும்புவோர் அதிகாலை 4.00 மணி வரை தம் காவலரணில் தடுத்து வைக்கப்படுவர் என ஏற்கனவே உத்தரவிட்டுள்ள கடற்படையினர்,

கடந்த சில நாட்களாக மண்டைதீவு கடற்றொழில் படகுகளை இனம் காண்பதற்காக இவ்வாறு வெளிச்சம் பொருத்தப்பட்டிருக்க வேண்டும் என உத்தரவிட்டுள்ளனர். (33)


## வடக்கு - கிழக்கு மாகாணம்

# கேள்வி அறிவித்தல்

## நிர்மாண வேலை

01. நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தில் [ICTAD] கட்டடம் நிர்மாணிப்பதற்கு தரம் எம்-8லும் அதற்கு மேல் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்களிடம் இருந்து மாவட்ட கேள்விச் சபை தலைவரினால் கீழே குறிப்பிடப்பட்ட அட்டவணையில் காட்டப்பட்ட வேலைக்கு மூடிய கேள்விகள் கோரப்படுகின்றன.

02. கீழே குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத கட்டணத்தை காசாகவோ அல்லது கிளிநொச்சியில் மாற்றத்தக்கதான அரசாங்க அதிபர், கிளிநொச்சி என்ற பெயரில் அங்கீகரிக்கப்பட்ட வங்கியில் பெறப்பட்ட வங்கி ஆணையாகவோ(DRAFT) சமர்ப்பிப்பதன் பேரில் பிரதம எந்திரி, மாகாண கட்டடங்கள் திணைக்களம், கிளிநொச்சி அவர்களிடம் இருந்து 25.11.2003ஆம் திகதி பிற்பகல் 3.00மணிவரை கேள்விப் பொதிக்கான கேள்வி ஆவணங்களின் இரு பிரதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

03. ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தினரால் வழங்கப்பட்டதும் இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விபரங்கள் அடங்கியதுமான பதிவுப் புத்தகத்தினை சமர்ப்பித்தல் வேண்டும்.

04. கேள்வி கோருபவர் ஒருவருக்கு ஒருதொகுதி ஆவணங்கள் மட்டும் விநியோகிக்கப்படும். ஆர்வமுள்ள தகுதியான கேள்வி தாரர்கள் கேள்விப் பத்திரங்களை பிரதம எந்திரி, மாகாண கட்டடங்கள் திணைக்களம், கிளிநொச்சியில் இலவசமாகப் பார்வையிடுவதோடு மேலதிக விபரங்களையும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் காட்டப்பட்ட முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.

05. சமர்ப்பிக்கப்படும் கேள்விகள், கேள்விகள் திறக்கப்படும் தினத்திலிருந்து 90நாட்களுக்குட் செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். அத்துடன் அரசாங்க அதிபர், கிளிநொச்சி என்ற பெயரில் எடுக்கப்பட்ட கேள்விப் பிணையும் கேள்விகளுடன் இணைக்கப்பட்டு பின்வரும் முகவரிக்கு 27.11.2003பிற்பகல் 3.00மணிக்கு முன் ஒப்படைக்கப்படல் வேண்டும். பெறப்பட்ட கேள்விகள் உடனடியாகத் திறக்கப்படும் கேள்விதாரர் அல்லது அவரின் பிரதிநிதி விரும்பின் சமுகம் அளிக்கலாம். மேற்குறிப்பிட்ட திகதியில், காரியாலயம் மூடப்படவேண்டிய சந்தர்ப்பம் ஏற்படின் அதற்கு அடுத்த வேலைநாள் அன்று அதே இடத்தில் அதே நேரத்தில் கோரல்கள் பெறப்பட்டு திறக்கப்படும்.

06. வேறு விபரங்களை கேள்வி ஆவணங்களில் பார்வையிடலாம்.

| வேலை விபரம் | கேள்விப் பிணை ரூபா. | மீளளிக்கப்படாத கட்டணம் | அலுவலக முகவரி |
|---|---|---|---|
| கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அவசர வைத்திய சிகிச்சைப் பிரிவு நிர்மாணித்தல் | 29.000/= | 500/= | பிரதம எந்திரி, கட்டடங்கள் திணைக்களம், கிளிநொச்சி. |

அரசாங்க அதிபர்,
மாவட்டச் செயலகம்,
கிளிநொச்சி.

(சி-8908)

# ஈராக்கில் புதிய தந்திரோபாயங்களுடாக அமெரிக்கப் படையினர் நடவடிக்கை!

## -ரிக்றிட் நகரில் பெரும் தாக்குதல்

**ஈராக்கில் அமெரிக்கப் படையினர் புதிய தந்திரோபாய நடவடிக்கைகளைக் கையாண்டு வருவதாகப் படைத்துறை ஆய்வாளர்களை மேற்கோள்காட்டி வெளியாகும் செய்திகள் தெரிவிக்கின்றன.**

ஈராக்கில் அமெரிக்கப் படையினருக்கு எதிரான தாக்குதல்கள் நாளுக்கு நாள் தீவிரமடைந்து வருவதை அடுத்து, தாக்குதல்களை நடத்தும் போராளிகளுக்கெதிரான தாக்குதல்களைத் தீவிரப்படுத்த அமெரிக்கா இராணுவம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

அமெரிக்கப் படையினர் மேற்கொள்ளும் படை நடவடிக்கைகளில் புதிய தந்திரோபாயங்களைப் புகுத்தியுள்ளமை அங்கு அவர்கள் செயற்பட்டுவரும் முறைகளிலிருந்து அறியக்கூடியதாக இருக்கிறது.

ரிக்றிட் நகரில் அமெரிக்கப் படையினர் நேற்று முன்தினம் தீவிர தேடுதல் நடவடிக்கைகளைப் புதிதாக ஆரம்பித்துள்ளனர். இதன் போது கடுமையான தாக்குதல்களை அவர்கள் நடத்தியிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

கனரக வாகனங்கள் மற்றும் உலங்கு வானூர்திகளின் உதவியுடன் அமெரிக்கப் படையினர் இப் பகுதியில் தீவிர தாக்குதல்களை நடத்தியுள்ளனர். அத்துடன் ஏவுகணைத் தாக்குதலும் நடத்தப் பட்டுள்ளன.

இந்த நடவடிக்கையில் 6 பேர் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது. இவர்கள் பொதுமக்களாக இருக்கலாம் எனச் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. அத்தோடு நூற்றுக்கும் மேலான ஈராக்கியர்கள் அமெரிக்கப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கெரில்லாக்கள் மறைந்திருந்த முகாமொன்றை நோக்கியே படை நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதாக அமெரிக்க படைத்தரப்பு செய்தி வெளியிட்டுள்ளது. ரிக்றிட் நகரம் பாக்தாத்திற்கு வடக்கே 180 கிலோமீற்றர் தூரத்தில் உள்ளது.

அமெரிக்கப் படையினரின் இவ்வாறான தாக்குதல்களால் பொதுமக்களுக்குப் பெரும் இழப்புகள் ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், சன்னி முஸ்லிம்கள் அதிகமாக வாழும் பகுதிகளில் அமைந்துள்ள சுமார் 450 வீடுகளில் அமெரிக்கப்படையினர் கடுமையான தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

படை நடவடிக்கையில் தீவிர ஆயுதப் பிரயோகம் கெரில்லாக்களின் தாக்குதல்களைக் கட்டுப்படுத்தும் என அமெரிக்கப் படையினர் நம்புவதாகக் கூறப்படுகிறது.

## விமான விபத்து

சூடானில் பயணிகள் விமானம் ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

இவ் விமானம் தலைநகரில் இருந்து புறப்பட்டு சில மணித்தியாலங்களின் பின்பே வீழ்ந்து நொருங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது. இவ்விபத்தில் 05 பேர் உயிரிழந்துள்ளனர். இவர்களில 04 பேர் ரஷ்யப் பிரஜைகள் ஆகும்.



பக்தாத்தில் அதிகரித்து வரும் கரந்தடித் தாக்குதல்களையடுத்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள ஈராக்கியப் பொலிசார் ஒருவர் குடும்பம் ஒன்றைக் கூர்ந்து அவதானிக்கின்றார்.

# அமெரிக்க ஆக்கிரமிப்பிற்கெதிராக 'பக்கிங்காம்' மினுள் பெண் பிரவேசம்

(லண்டன்)

ஈராக் மீதான அமெரிக்காவின் ஆக்கிரமிப்பை எதிர்த்து பிரிட்டன் பெண் ஒருவர் பலத்த பாதுகாப்பையும் மீறி லண்டனிலுள்ள பக்கிங்காம் மாளிகையின் நுழைவாயிலை சென்றடைந்துள்ளார். அமெரிக்க சனாதிபதி புஷ்சின் விஜயத்துக்கு முன்னால் இச்சம்பவம் நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. பிரிட்டிஷ் மகாராணி எலிசபெத்தின் மேற்படி பங்கிங்காம் மாளிகையிலேயே சனாதிபதி புஷ் லண்டன் வருகையில் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை தெரிந்ததே.




தென்கொரியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் டொனால்ட் ரம்ஸ்பீல்ட் சியோலில் உள்ள தேசிய மயானம் ஒன்றுக்கு விஜயம் செய்த போது அங்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் ஆர்ப்பாட்டக்காரர்கள்.

# பொதுமக்கள் மீதான தாக்குதல்கள் அதிகரிப்பு குறைந்தது 55 ஆயிரம் ஈராக்கியர் இதுவரை பலி

அமெரிக்கா தலைமையில் ஈராக் மீதான தாக்குதல்கள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் இதுவரை ஆயிரக்கணக்கான ஈராக்கியப் பொதுமக்கள் கொல்லப்பட்டு விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அங்கு மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடுகளின் படி இந்த விபரம் வெளியாகியுள்ளது.

ஈராக் மீதான தாக்குதல்கள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் இருபத்தைந்தாயிரத்திற்கும் ஐம்பதாயிரத்திற்கும் இடையிலான பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதாக அக்கணிப்பீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அமெரிக்க இராணுவத் தாக்குதல்களின் போது சாதாரண மக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் அதிகரித்து வருவதாகவும் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனையிட்டு ஈராக் மக்கள் கடும் எதிர்ப்பினை வெளிப்படுத்தி வருவதாகவும் அங்கிருந்து வெளியாகியுள்ள தகவல்கள் தெரிவிக்கின்றன.

# பெத்தலகேம் நகரருகே இரு இஸ்ரேலியர் கொலை

பெத்தலகேமிற்கு அருகே இரண்டு இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இவர்கள் சினைப்பர் தாக்குதலினால் உயிரிழந்துள்ளதாகத் தெரிய வருகிறது. எல்காதர் என்ற கிராமத்திற்கு புறம்பாகவுள்ள வீதியில் இத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக இஸ்ரேலிய இராணுவம் அறிவித்துள்ளது.

எனினும் கிளர்ச்சிக் குழுக்களுடன் போர் நிறுத்தப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கும் பலஸ்தீனப் பிரதமரின் முயற்சிகளை இச் சம்பவம் பாதிக்கலாம் எனக் கூறப்படுகிறது. இஸ்ரேலிய ஆளும் கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் கருத்துத் தெரிவிக்கையில்;

தற்போதைய நிலையில் மற்றுமோர் யுத்தநிறுத்தத்தைக் கோருவது விசித்திரமானதெனக் கூறியுள்ளார்.



யுத்த அனர்த்தத்துக்குள்ளாகியுள்ள தமது அயல் நாடான ஈராக்கின் அரசியல் பொருளாதார விடயங்களில் உதவும் நோக்கில் ஈராக்கிய ஆளும் கட்சித் தலைவர் ஜலால் தலபானியுடன் ஈரானிய சனாதிபதி முகமத் கட்டாமி (வலது) டெகிரான் சாதாபாத் மாளிகையில் சந்திக்கின்றார்.

# ஈராக்கில் அரசியல் ரீதியாகப் பங்காற்ற ஐ.நா.சபை தீவிரமாக ஆலோசனை

## -ஈராக் திரும்புதல் பற்றி முடிவில்லை

ஐக்கியநாடுகள் சபை ஈராக்கில் அரசியல் ரீதியான பங்களிப்புச் செய்வது பற்றிச் சிந்தித்து வருவதாக அதன் செயலாளர் நாயகம் கொபி அனான் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவும், ஈராக்கும் விரும்புவதைப் போன்று அதிகாரத்தை இடைக்கால அரசாங்கந்திடம் ஒப்படைப்பது தொடர்பாக எவ்வாறு பங்களிக்கலாம் என்பது பற்றி அவர் ஆராய்ந்து வருவதாகத் தெரிய வருகிறது.

அண்மையில் ஈராக்கியத் தலைவர்களையும், அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின் பவலையும் கொபி அனான் சந்தித்த போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் அதிகார மாற்றத்திற்கான அமெரிக்காவின் கால அட்டவணை குறித்து அவர் அவதானமான கருத்துக்களைக் கூறியுள்ளார். எனினும் ஐ.நா.சபையின் பாக்தாத் தலைமையகத்தின் மீது கடந்த ஆகஸ்ட் மாதம் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலின் பின்னர் வெளியேற்றப்பட்ட ஐ.நா. ஊழியர்களை ஈராக்கிற்குத் திருப்பி அனுப்புவது தொடர்பாக இன்னும் முடிவு செய்யப்படவில்லை என அவர் மேலும் கூறியுள்ளார்.

ஐ.நாடுகள் சபையின் அரசியல் ரீதியான பங்களிப்புப் பற்றிக் கருத்துத் தெரிவித்த ஐ.நா.அதிகாரி ஒருவர், வெளிநாடு ஒன்றில் ஈராக் தொடர்பான மாநாட்டை ஏற்பாடு செய்வதில் தமது அமைப்பு உதவி செய்யும் எனக் கூறியுள்ளார்.



உலகில் முதலாவதும் எங்குமில்லாததுமான குத்துச் சண்டைப் போட்டிக்கு ஆயத்தமாகும் ஒராங்குட்டான் இன வாலில்லாக் குரங்குகள். பாங்கொக்கில் இப் போட்டி நடைபெற்றது.

# ஈரானின் அணுவாயுத உற்பத்தி இஸ்ரேலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும்

## -புலனாய்வுப் பிரிவு எச்சரிக்கை

ஈரான் மேற்கொண்டு வருகின்ற அணுவாயுத உற்பத்தி தொடர்பாக இஸ்ரேல் புலனாய்வுப் பிரிவினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்வுற்பத்தி இஸ்ரேலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் என அவர்கள் மேலும் கூறியுள்ளனர்.

ஈரானில் அணுசக்தி மின் உற்பத்திக்காகவே பயன்படுத்தப்பட்டு வருகிறது என ஈரான் வலியுறுத்தி வரும் நிலையில் அங்கு பரிசோதனைகளை மேற்கொள்வதற்கென சென்ற ஐநா குழுவினர் அணுவாயுத உற்பத்திகள் இடம் பெறுவதற்கான சந்தேகத்திற்கிடமான எவ்வித அறிகுறிகளும் தென்படவில்லை எனக் குறிப்பிட்டுள்ளமை தெரிந்ததே.

# உருளைக்கிழங்குச் செய்கை பற்றிய சில குறிப்புகள்

(தொடர்ச்சி.....)

### நடுகை:-

நடுகைக்காகத் தெரிவு செய்யப்படும் நிலமானது நீர் தேங்காத,நீர் பாய்ச்சும் வசதியுள்ள ஓரளவு மேட்டு நிலமாக இருத்தல் வேண்டும். இப்பயிரில் விளைவானது நிலத்தின் கீழ் தோற்றுவிக்கப்பட இருப்பதால் ஆழமான நிலப் பண்படுத்தலை மேற்கொள்வது அவசியமானதொன்றாகும். இதன் பின்னர் தரை மட்டுப்படுத்தப்பட்டு மட்டமான தரையில் அல்லது சால்கள் புருவங்கள் அமைக்கப்பட்டுப் புருவங்களில் 60x40cm இடைத் தூரத்தில் கிழங்குகள் நடப்பட வேண்டும். நடப்படும் போது நடுகைக் குழியில் மட்டும் போதுமான அளவு கூட்டெருவையும் சிறிதளவு காபோபியூரானையும் இட்டு நடுகை செய்யலாம். இதன் மூலம் கூட்டெருவை மிச்சப்படுத்துவதுடன் நடப்பட்ட கிழங்குகளை எறும்பு, நிலக் கறையான் என்பவற்றின் தாக்கத்தில் இருந்து பாதுகாக்கலாம்.

### வளமாக்கிப் பிரயோகம்:-

இப்பயிரைப்பொறுத்த மட்டில் அடிக்கட்டு, மேற்கட்டு வளமாக்கிகளை விவசாயத் திணைக்களத்தின் சிபாரிசுக்கு ஏற்ப பயன்படுத்துவது விரும்பத்தக்கது.

| வளமாக்கி | இடவேண்டிய அளவு Kg/ ஹெக்ரேயர் (2.5 ஏக்கர்) | |
|---|---|---|
| | அடிக்கட்டு | மேற்கட்டு (மண் அணைப்பின் போது) |
| யூரியா | 125 | 125 |
| பொஸ்பரசு வளமாக்கி (TSP) | 125 | - |
| மியூரியேற் ஒப் பொட்டாசு (Mop) | 40 | - 40 |

இப்பயிரின் ஆரம்ப வளர்ச்சி நிலைகளில் நைதரசன் வளமாக்கிப் பிரயோகம் மூலம் அங்குரப் பகுதியின் வளர்ச்சியைத் தூண்டுதல் அவசியம் எனினும், மிதமிஞ்சிய பிரயோகமானது பயிரில் கிழங்குருவாக்கத்தைத் தாமதமடையச் செய்கிறது. கிழங்கின் இறுதி வளர்ச்சிக் காலங்களில் மிதமிஞ்சிய நைதரசன் வளமாக்கிப் பிரயோகமானது பல சோணைகளைக் கொண்ட கிழங்குகளின் உருவாக்கத்தைத் தூண்டுகின்றது. இது சந்தையில் கிழங்குகளின் தரத்தைக் குறைக்கக் கூடியதொரு அம்சமாகும்.

### மண் அணைப்பு:-

இப்பயிர் முளைத்து 30-35 நாட்கள் அளவில் நிலத்திற்குக் கீழான பிரதான தண்டுகளின் கக்க அரும்புகளிலிருந்து கிழங்குகளைத் தோற்றுவிக்கும் நிலக் கீழ்த் தண்டுகள் வளர்ச்சி அடைகின்றன. இதையடுத்துள்ள சில நாட்களிலேயே கிழங்கு உருவாக்கம் நடைபெறுகின்றது. இக்கால கட்டத்தில் நிலவும் வரட்சித் தன்மைகள் அல்லது களை எடுத்தல்,சாறுதல் போன்ற நிலக்கீழ்த் தண்டுகளிற்குப் பொறிமுறைக் காயங்களை ஏற்படுத்தும் செயற்பாடுகள் உருவாக இருக்கும் கிழங்குகளின் எண்ணிக்கையைக் குறைக்கின்றன. எனவே முளைத்ததிலிருந்து 25 தொடக்கம் 30 நாட்களிற்கிடையில் மண் அணைப்புச் செய்தல் அவசியமாகும். சில சந்தர்ப்பங்களில் மண் அணைப்பின் பற்றாக்குறை அல்லது நீர்ப்பாசனத்தின் போது ஏற்படும் மண் அரிப்புக் காரணமாக சூழலுக்கு வெளிக்காட்டப்படும் நிலக் கீழ்த் தண்டுகள், சூரிய ஒளி படுவதன் மூலம் சாதாரண ஒளித்தொகுப்புச் செய்யும் தண்டுகளைப் போன்று வளர்ச்சியடைய ஆரம்பிக்கின்றன. கிழங்கு உருவாக்கத்தின் பின்னர் மேற்குறித்த காரணங்களினால் கிழங்குகள் சூழலுக்கு வெளிக்காட்டப்படும் சந்தர்ப்பங்களில் அவற்றில் ஒளிபடும் பகுதியில் உள்ள தோல் பச்சை நிறமானதாக மாற்றப்படும். இதன்போது சோலானின் எனப்படும் கசப்புச் சுவையுடைய நச்சுப் பதார்த்தம் கிழங்குகளில் உற்பத்தி செய்யப்படுகின்றது. இவை பாவனைக்கு உகந்தவை அல்ல. இப்பிரச்சினை உள்ள இடங்களைத் தொடர்ச்சியான கண்காணிப்பின் மூலம் இனங்கண்டு தேவையான இடங்களில் மண் அணைப்புச் செய்வதன் மூலம் தவிர்த்துக் கொள்ளலாம்.

### அறுவடை:-

கிழங்கு நன்கு முதிர்ச்சி அடைந்ததும் அங்குரப் பகுதியில் இலைகள் பழுப்படைந்து உதிர ஆரம்பிக்கும் இந்நிலையில் அறுவடையை மேற்கொள்ளலாம்.


### களஞ்சியப்படுத்தல்:-

எமது பிரதேச காலநிலையின் அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட கால எல்லையினுள் நடுகையை மேற்கொள்வதனால் விளைவும் ஒரு குறிப்பிட்ட காலத்திலேயே பெறப்படும். இதன் காரணமாகச் சந்தையில் கிழங்கின் விலையில் பெரு வீழ்ச்சி ஏற்படலாம். இப் பிரச்சினையை அறுவடை செய்யப்பட்ட கிழங்குகளைத் தற்காலிகமாகக் களஞ்சியப் படுத்துவதன் மூலம் தவிர்த்துக் கொள்ளலாம்.

களஞ்சியப்படுத்தும் கிழங்குகள் கட்டாயமாக முதிர்ச்சி அடைந்தவையாக இருத்தல் வேண்டும். ஏனெனில் இவற்றின் தோல் கிழங்கின் சேமிப்புப் பகுதியிலிருந்து தம்மூடான நீரிழப்பை அனுமதிப்பதில்லை. ஆனால் முதிர்ச்சி அடையாத கிழங்குகள் இலகுவில் பொறிமுறைக் காயங்களிற்கு உட்படுபவையாக இருப்பதுடன் இவற்றின் தோல் தம்மூடாக ஏற்படும் நீரிழப்பைத் தடுக்கும் ஆற்றல் அற்றதாகக் காணப்படுகின்றது. எனவே நன்கு முதிர்ச்சி அடையாத கிழங்குகள் சேமிக்கப்பட்டால் அவை இலகுவில் அழுகல் அடைவதுடன் விரைவில் நீரிழப்புக் காரணமாகச் சுருக்கமடைந்து பொலிவற்றவையாகக் காணப்படும்.

எஸ். சத்தியசீலன்,
B.Sc (Hons) in Agric
வெளிக்கள உதவியாளர்,
யு.என்.எச்.சி.ஆர்.,
யாழ்ப்பாணம்.

இன்று அபிவிருத்தி அடைந்த நாடுகளில் குளிரூட்டப்பட்ட களஞ்சியங்களில் 2.2-3.3°c வெப்பநிலையில் 75-80 வீத ஈரப்பதனில் கிட்டத்தட்ட 6 மாதங்களுக்கு உருளைக் கிழங்குகள் களஞ்சியப்படுத்தப்படுகின்றன. இலங்கையில் இந்த அளவுக்கான களஞ்சிய வசதிகள் இல்லை. எனினும், மலை நாட்டுப் பிரதேசங்களில் பரவிய சூரிய ஒளிக் களஞ்சியங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஓர் உருளைக்கிழங்குக் களஞ்சியத்துக்கு இருக்க வேண்டிய அம்சங்களாக, தாழ்வெப்பநிலை(<20°c), மிதமான காற்றோட்டம், பரவிய சூரிய ஒளி, அதிகளவு ஈரப்பதன் என்பவற்றைக் குறிப்பிடலாம். தாழ் வெப்பநிலை,அதிகரித்த ஈரப்பதன் என்பவற்றினால் கிழங்கிலிருந்து சூழலுக்கு இழக்கப்படும் நீரின் அளவு குறைவாக இருக்கும். அதேநேரம் தாழ்வெப்பநிலைகளில் கிழங்குகளின் சுவாச வீதம் மிக இழிவாக இருக்கும். இக் காரணங்களினால் கிழங்குகளில் ஏற்படும் நிறைக் குறைவும் இழிவானதாக இருக்கும். மிக அதிகரித்த ஈரப்பதன் நிலைமைகளில் கிழங்குகளில் இலகுவாகப் பங்கசு வித்திகளின் தொற்றல் ஏற்பட்டு அவை அழுகல் அடையும் நிலை ஏற்படும். களஞ்சியங்களில் கிழங்குகளின் சுவாசத்தின் போது வெளிவிடப்படும் காபனீரொட்சைட்டு வாயு களஞ்சிய சூழலில் தேங்குவதால் அச் சூழலின் வெப்பநிலை அதிகரித்து, கிழங்குகளில் அழுகலைத் தோற்றுவிக்கலாம். ஆனால் மிதமான காற்றோட்ட நிலைமைகளில் கிழங்குகளிலிருந்து வெளிவிடப்படும் காபனீரொட்சைட்டு ஓரளவிற்கு அகற்றப்படுவதனால் மேற்குறித்த பாதிப்பு தவிர்க்கப்படுகிறது. அதிகரித்த காற்றோட்ட நிலைமைகளில் களஞ்சியச் சூழலில் ஒட்சிசனின் அளவு அதிகரிப்பதனால் அது கிழங்குகளின் சுவாச வீதத்தில் அதிகரிப்பை ஏற்படுத்த ஏதுவாகின்றது. பரவல் ஒளி நிலைமைகளில் கிழங்குகளைக் களஞ்சியப் படுத்தும்போது கிழங்குகளில் முளைகொள்ளல் ஏற்படுவதைத் தடுக்கலாம். கிழங்குகளில் முளை கொள்ளல் நிகழும்போது அவற்றின் சுவாச வீதம் மிகமிக அதிகமாக இருப்பதனால்



அவற்றில் சடுதியான நிறைக்குறைவு ஏற்படும். மேற்குறித்த கருத்துக்களை கவனத்திற்கொண்டு நாமே நமது பிரதேசத்திற்கேற்ற எளிய, தற்காலிக களஞ்சியங்களை நிர்மாணிக்க முடியும். நன்கு நிழலான ஓர் இடத்தில் பரவல் ஒளி கிடைக்கக் கூடியதாகவும், ஓரளவான காற்றோட்டம் கிடைக்கக் கூடியதாகவும் கொட்டகைகளை அமைத்து, அவற்றினுள் பரண்களில் ஒரு படைத்தடிப்பில் கிழங்குகளை அடுக்கி வைத்துச் சேமிக்கலாம். கொட்டகையின் அடிப்பகுதியில் மணல் மண்ணினை இட்டு, அதை அடிக்கடி நீரினால் நனைப்பதன் மூலம் களஞ்சியச் சூழலின் ஈரப்பதனை ஓரளவிற்கு அதிகரிக்க முடியும். களஞ்சியப்படுத்தற் காலங்களில் தொடர்ச்சியான கண்காணிப்புக்களை மேற்கொண்டு, அழுகலடையும் கிழங்குகளைக் களஞ்சியத் தொகுதியிலிருந்து அகற்றுதல் அத்தியாவசியமான ஒரு செயல்முறையாகும்.

காலம் தாழ்த்திய அறுவடை மூலம் கிழங்குகளை நிலத்தின்கீழ் சேமித்து வைத்தலும் ஓர் இலகுவானதும் செலவற்றதுமான முறையாகும். அத்துடன் மற்றைய களஞ்சிய முறைகளுடன் ஒப்பிடும்போது இம்முறையில் கிழங்குகள் புதுப்பொலிவுடன் சுருக்கமற்றவையாக இருப்பது சந்தையில் அதிக வரவேற்பைப் பெறக்கூடியதாகவுள்ளது. இம்முறையில் கொடிகள் முற்றி வாடி உலர்ந்த பின்னர் உருளைக்கிழங்கு நிலத்தில் விடப்படுகிறது. இந்நிலைமைகளில் அதிகரித்த மண் வெப்பநிலை காணப்பட்டால் சில கிழங்குகள் வெதும்பலடைந்து அழுகுவதுடன் ஒட்டுமொத்தமான கிழங்குகளின் சுவாச வீதம் கூட்டப்பட்டு விளைவில் குறைவு ஏற்பட இடமுண்டு. இந்நிலைமைகளில் மட்டுப்படுத்தப்பட்ட நீர்ப்பாசனத்தினால் நிலத்தை உலரவிடாது தடுத்தல் அல்லது வேறேதேனும் முறைகளைப் பயன்படுத்தி மண் வெப்பநிலையில் உயர்வு ஏற்படுவதைத் தடுப்பதன் மூலம் மேற்குறித்த பாதிப்புக்களின் தாக்கத்தைக்குறைக்கலாம். இம்முறையில் களஞ்சியப்படுத்தமுனையும் சந்தர்ப்பங்களில் செய்கை பண்ணப்படும் கிழங்கினத்தின் உறங்குநிலை பற்றி அறிந்திருத்தல் முக்கியமான ஒரு அம்சமாகும். பொதுவாக நீண்ட (2-2½ மாதம்) கால உறங்குநிலை கொண்ட கிழங்கினங்களுக்கே இது பொருத்தமான முறையாகும். குறுங்கால அல்லது உறங்குநிலையற்ற கிழங்கினங்களாயின் அவை தோட்டங்களில் முளைக்கும் நிலை ஏற்படும். எனினும் இங்கு பயிரிடப்படக்கூடிய டிசிறி இனம் குறிப்பிடத்தக்களவு கால உறங்குநிலை கொண்டதாக இருப்பதனால் இக் களஞ்சிய முறையைப் பின்பற்றமுடியும்.

□ □ □ □ □

## தென்னைகளுக்கு உரிமட்டைகள் இடுபவர்களுக்கு அபிவிருத்திச் சபை மானியம் வழங்கும்!

(அலுவலகசெய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் தென்னை மரங்களுக்கு பிரமாண அடிப்படையில் உரிமட்டைகள் இடுபவர்களுக்கு தென்னை அபிவிருத்திச் சபை மானிய உதவித் திட்டத்தினை வழங்க முன்வந்துள்ளது.

இது குறித்து கிளிநொச்சிச் செயலகத் தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் க.தனிநாயகத்துடன் எமது செய்தியாளர் தொடர்பு கொண்ட பொழுது தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் தென்னைப் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் மக்கள் 1/2 ஏக்கருக்கு மேற்பட்டதும், 50ஏக்கருக்கு உட்பட்டதுமான காணிகளில் பின்வரும் அட்டவணையின் பிரகாரம் நடைமுறைகளை மேற்கொள்ள வேண்டும்.

அதாவது தேங்காய் உரி மட்டைகளை தென்னை மரங்களுக்கு இடையில் 8அடி நீளம் 4அடி அகலம் 3அடி ஆழம் கொண்ட குழிகளை வெட்டிய பின் குழியினுள் 300 முதல் 350 வரையான உரி மட்டைகளை, உரிமட்டைகள் மேல் நோக்கியிருக்கும் வகையில் படைபடையாக இட்டு மண் அணைக்க வேண்டும்.

ஒரு ஏக்கர் தென்னைப் பயிர்கள் உள்ள நிலத்தில் மேற்குறிப்பிட்ட பிரமாண அடிப்படையில் 30குழிகள் அமைக்கலாம். இதனடிப்படையில் அமைக்கப்படும் ஒவ்வொரு குழிகளுக்கும் 80 ரூபா வீதம் வழங்கப்படும் எனத் தெரிவித்தார்.

மேற்படி வேலைத்திட்டத்தினை மேற்கொள்பவர்கள், மேற்கொண்டு வருபவர்கள், தங்களால் மேற்கொள்ளப்பட்ட விபரங்களை கிளி.மாவட்டச் செயலகத்திலுள்ள தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தரை புதன் கிழமைகளில் சந்தித்து விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் எனவும், இத்திட்டம் மார்கழி 12ஆந் திகதி வரை நடைமுறைப் படுத்தப்படும் எனவும் தெரிவித்துள்ளார். (சோ)

## எந்திரவியல் பீடத்திற்கு விண்ணப்பிக்க வேண்டுகை

(அலுவலகசெய்தியாளர்)

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் எந்திரவியல் பீடத்திற்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பப் படிவங்கள் கொழும்பு நுகேகொட பிராந்திய நிலையத்தில் விநியோகிக்கப் பெற்று வருகின்றது.

மற்றும் மேற்படி விண்ணப்பப் படிவங்களைத் திறந்த பல்கலைக் கழக ஏனைய கற்கை நிலையங்களிலும் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப் பங்களை டிசம்பர் 28ஆந் திகதிக்கு முன்னதாக விண்ணப்பதாரிகளினால் பூர்த்தி செய்யப் பெற்று அனுப்பி வைக்கப்படல் வேண்டுமெனவும், மேலதிக விபரங்களைப் பெற விரும்பின் இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்-பிராந்திய நிலையம் பிறவுன் வீதி, கொக்குவில் என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளும் வண்ணம் கிளி. மாவட்ட மேலதிக அரச அதிபர் நா.வேதநாயகன் வேண்டியுள்ளார். (சோ)

### 3-ம் தவணை விடுமுறை

அரசாங்கப் பாடசாலைகளின் மூன்றாம் தவணை விடுமுறை எதிர்வரும் 28ஆந் திகதி ஆகும். சனவரி மாதம் 5ஆந் திகதி அடுத்த தவணை ஆரம்பமாகிறது டிசம்பர் 1 தொடக்கம் 12 ஆம் திகதிவரை, க.பொ.த.சா/த பரீட்சைகள் நடைபெறவுள்ளமை தெரிந்ததே.

# கேள்விக்குள்ளான நிலையில் சமாதானத்தின் எதிர்காலம்!

இனப்பிரச்சினைக்கான 'அரசிற் தீர்வின்' எதிர்காலம் என்ன என்பது இன்று முக்கியமானதொரு கேள்விகளில் ஒன்றாகும். ஏனெனில், யுத்தநிறுத்தமும் சமாதான முயற்சிகளும் தோல்வி அடையும் கட்டத்தை நெருங்கிவிட்டனவா? என்ற கேள்வி பலமானதொன்றாகவே இன்று பலர் மத்தியிலும் எழுந்துள்ளது.

விடுதலைப்புலிகள் இயக்கம், தம் மீது யுத்தம் திணிக்கப்படும் வரையில் யுத்த நிறுத்தம் கடைப்பிடிக்கப்படும் என உறுதியாகத் தெரிவித்து விட்டனர். கடந்த 13ஆம் திகதி நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெலகேசனைச் சந்தித்த தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் "யுத்தம் எங்கள் மீது திணிக்கப்படுகின்ற நிலை வரும் வரை நாங்கள் இந்த யுத்தநிறுத்தத்தைச் செம்மையாகக் கடைபபிடிப்பதற்கு உறுதிப்பாட்டுடன் இருக்கின்றோம்'' எனத் தெளிவாகவும், உறுதியாகவும் தெரிவித்திருந்தார்.



அத்தோடு, ''சமாதானப் பேச்சுவார்த்தைகளில் நாம் ஆர்வத்துடனும், உறுதிப்பாட்டுடனும் இருக்கின்றோம்'' எனவும் விடுதலைப்புலிகளின் நிலைப்பாட்டைத் தெளிவாகவே எடுத்துக் கூறியிருந்தார். விடுதலைப்புலிகளின் இந்நிலைப்பாடானது அவர்கள் யுத்த நிறுத்தம் தொடர்பாகவும், சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாகவும் தெளிவானதொரு நிலைப்பாட்டைக் கொண்டுள்ளனர் என்பதை உலகிற்கு அறிவிப்புச்செய்வதாக இருந்தது.

ஆனால், சிறிலங்காவில் ஏற்பட்டுள்ள அதிகாரப்போட்டியானது சமாதானப் பேச்சுவார்த்தைதொடர்பாக சனாதிபதிக்கும் - பிரதமருக்கும் இடையில், சீர்செய்ய முடியாத அளவில் வலுவான முரண்பாட்டைக்கொண்டதாக அமைந்திருந்தது. இந்நிலையில், சமாதான முயற்சி தொடர்பான ஏற்பாட்டாளராகப் பணியாற்றிய நோர்வே தமது பணிகளை இடைநிறுத்தி விட்டு வெளியேற வேண்டிய நிலைக்கு உள்ளாகியது.



பிரதமர் ரணில்விக்கிரமசிங்க, சனாதிபதியினால் பறிக்கப்பட்ட மூன்று அமைச்சுக்களையும் மீள ஒப்படைக்கும் வரையில் சமாதானப் பேச்சுக்களைத் தாம் முன்னெடுக்கப்போவதில்லை என்ற உணர்வை நோர்வே தரப்பினிடம் வெளியிட்டார். நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் மூன்று தடவை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்த போதும், ரணில் விக்கிரமசிங்க தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளவில்லை.

அதிலும் குறிப்பாக பாதுகாப்பு அமைச்சு தனது கையில் இல்லாத நிலையில் யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடிப்பதற்கான உறுதிமொழியையோ அன்றி, இராணுவக்கட்டுப்பாட்டுப்பகுதியில் அரசியல் பணியாற்றும் விடுதலைப்புலிகளின் பாதுகாப்புத் தொடர்பாகவோ தம்மால் உறுதியெதையும் தரமுடியாது எனவும் உறுதிபடத் தெரிவித்தார். பிரதமரின் இந்நிலைப்பாடானது ஏற்றுக்கொள்ளத்தக்கதொரு நிலைப்பாடு போன்றே அனைவராலும் நோக்கப்பட்டது.

இதேவேளை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவோ, யுத்தநிறுத்த உடன்பாட்டிற்கும், சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்வதற்கும் ஆதரவு அளிக்கப்படும் எனத் தெரிவித்ததோடு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பின் பாதுகாப்பு அமைச்சர் என்ற ரீதியிலும் ஒத்துழைப்பு வழங்கப்படும் எனத் தெரிவித்திருந்தார்.

ஆனால், சனாதிபதி சந்திரிகா பாதுகாப்பு அமைச்சை மீள ஒப்படைக்க தயாராக இல்லாத நிலையிலும், சனாதிபதி சந்திரிகாவின் வாக்குறுதிகளில் நம்பிக்கை கொள்ள எவரும் தயாராக இல்லாத நிலையும் நோர்வே அரசிற்கு சனாதிபதி சந்திரிகாவுடன் கடந்த காலத்தில்ஏற்பட்டிருந்தபட்டறிவு காரணமாகவும் சமாதான முயற்சிகளின்ஏற்பாட்டாளர்கள் என்ற தமது பணியில் இருந்து நோர்வே விலகிக்கொள்ளத் தீர்மானித்தது.

ஆனால், நோர்வே தனது பணியில் இருந்து விலகிக்கொள்வதற்கு முன்னர் சனாதிபதி சந்திரிகாவை இரு தடவையும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை மூன்று தடவையும் சந்தித்த பின்னர் வெளியேறியமையானது, இருதரப்பினர் இடையேயும் இருந்த பிணக்கினைச் சீர்செய்யமுடியாது என்ற உணர்வை அவர்கள் ஏற்றுக்கொண்டமையே காரணமாக இருந்திருத்தல் கூடும்.

இத்தகையதொரு நிலையில் சமாதானப் பேச்சுவார்த்தைகளின் எதிர்காலம் எத்தகையதாக அமையப்போகின்றது என்பது பதிலளிக்க முடியாத பல மில்லியன் டொலர் பெறுமதியான கேள்வியாகவே உள்ளது. ஏனெனில், தென்னிலங்கையில் மணிக்கணக்கில் மாற்றம் பெற்றுவரும் அரசியற் சூழ்நிலையே சமாதானத்தின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் ஒன்றாக இருக்கும்.

ஆனால், தென்னிலங்கை அரசியற்களம் தெளிவு பெறுவதற்கான வாய்ப்புக்கள் குறைவாகவே உள்ளன. அவ்வாறு தெளிவு பெறினும் ஆட்சி அதிகாரம் யார் கையில் சென்றடையப்போகின்றது என்பதும் தென்னிலங்கையில் ஒரு ஸ்திரமான அரசியற் சூழ்நிலை தோன்றுமா? என்பதைப் பொறுத்துமே சமாதானத்தின் எதிர்காலம் குறித்துக் கருத்துகூற முடியும்.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தற்போதைய அரசியற் சூழ்நிலையில் விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடத்தத் தயாராக இருப்பதாகத் தெரிவிப்பினும் அதற்கான தொரு சூழலை அவரால் உருவாக்க முடியுமா? அதாவது அவரது நடவடிக்கைகள் அதற்கு அனுமதிக்குமா? என்பது கேள்விக்குரியதே.

தற்பொழுது ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தின் மீது சந்திரிகா குமாரதுங்க சுமத்தும் பிரதான குற்றச்சாட்டு புலிகளுக்கு விட்டுக் கொடுப்புக்கள் அதிகம் செய்யப்பட்டுவிட்டதென்பதே. இது அர்த்தமற்றதொரு குற்றச்சாட்டாகும். அடிப்படையில் புரிந்துணர்வு உடன்பாட்டை அரசாங்கம் முழு அளவில் நிறைவேற்றாதபோதும், விடுதலைப் புலிகளே விட்டுக்கொடுப்புடன் சமாதான முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி வந்தனர் என்பதே உண்மைநிலையாகும்.

அடுத்ததாக சனாதிபதி சந்திரிகா ரணில் விக்கிரம சிங்க விடம் மூன்று அமைச்சுக்களைப் பறிதெடுத்த போது அத்றகுக் கொடுத்த முக்கியமான விளக்கமானது தேசிய பாதுகாப்பிற்கு ஏற்பட்ட அச்சுறுத்தல் என்பதே. அதாவது விடுதலைப் புலிகளினால் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுவிட்டது என்ற குற்றசசாட்டே ஆகும்.



இது ஒருபுறமிருக்க, சனாதிபதி சந்திரிகா மூன்று அமைச்சுக்களைப் பொறுப்பேற்ற பின்னர் தொலைக்காட்சியில் ஆற்றிய உரையில், சமாதான முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதாகக் கூறினார். எனினும் விடுதலைப் புலிகள் குறித்து அவர் வெளியிட்ட கருத்துக்கள், நல்லெண்ணத்தை வெளிப்படுத்துவதாகவோ நட்புக்கரம் நீட்டுவதாகவோ சமாதானச் சூழலுக்கு ஏற்றதாகவோ இருக்கவில்லை.

தலைவர் பிரபாகரன் மீது குறை கூறுவதாகவும், தமிழ் மக்களை விடுதலைப் புலிகளிடமிருந்து மீட்டெடுப்பதற்காகவும் பேச்சுவார்த்தைகளை நடத்தவேண்டியதாக உள்ளது என்ற ரீதியிலேயே அமைந்துள்ளது. இது யுத்த காலத்தில் அவர் பேசிய பேச்சுக்களை ஒத்ததாகவே இருந்தது.

மேலும் இருதினங்களுக்கு முன்னர் கண்டியில் இருந்த படையினருக்கான உதவி வழங்கும் வைபவத்தில் பேசிய சனாதிபதி சந்திரிகா, ஐ.தே.முன்னணி ஆட்சிக்காலத்தில் கப்பல்கள் மூலம் புலிகள் ஆயுதங்களை கடத்தியதன் மூலம், திருமலையைச் சூழ 17 முகாம்களை அமைத்ததன் மூலமும் பல சந்தர்பங்களில் 'புலிகளின் யுத்தநிறுத்த மீறல்கள் மூலமும் நாட்டின் பாதுகாப்பிற்குப் பெரும் அச்சுறுத்தல் எழுந்துள்ளதாகக் குற்றம் சாட்டியுள்ளதோடு புலிகள் தனது உயிரைப் பறிக்க ஒரு புறம் எண்ணியிருக்க, தெற்கிலும் எனக்கு ஆபத்துக்கள் ஏற்பட்டுள்ளதாகக் குற்றம் சாட்டியுள்ளார்.

இவையாவற்றிற்கும் அப்பால், நோர்வே அரசை ஏற்பாட்டாளர்கள் என்ற நிலையில் இருந்து வெளியேற்றிவிட்டு இந்தியாவை சமாதான முயற்சிகளில் ஈடுபடுத்தும் முயற்சியிலும் சந்திரிகா குமாரதுங்கவும், அவரது பொ.ஐ.முன்னணியும் ஆர்வம் கொண்டுள்ளன. இந்த நிலையில், சந்திரிகா குமாரதுங்க சனாதிபதிப் பதவியில் நீடிக்கும் காலப்பகுதி முழுமையாகவும் பொ.ஐ.முன்னணி ஆட்சி அதிகாரத்திற்கு வரும் வேளையிலும் சமாதான முயற்சிகள் என்பது கேள்விக்குரியதாகவே இருக்கும்.

அதாவது சனாதிபதி சந்திரிகாவோ அன்றி பொ.ஐ.முன்னணியோ விடுதலைப் புலிகள் தொடர்பான நல்லெண்ணத்தை வெளிப்படுத்தாத நிலையிலும்-இந்தியா விடுதலைப்புலிகள் தொடர்பான தனது நிலைப்பாட்டை மாற்றாத வரையிலும் இந்தியாவின் மத்தியஸ்துவம் என்பது சாத்தியமானதொன்றாக இருக்கமாட்டாது. மேலும் சமாதான முயற்சியில் ஈடுபட இந்தியா கூட சம்மதிக்குமா என்பது கேள்விக்குரியதே. அதாவது கடந்த ஒஸ்லோவில் கூட்டப்பட்ட மாநாட்டில் விடுதலைப்புலிகள் பங்கு பற்றியதைத் தொடர்ந்து அதில் கலந்துகொள்ள மறுத்ததோடு, டோக்கியோ மாநாட்டில், விடுதலைப்புலிகள் கலந்து கொள்ளாத நிலையிலேயே பங்கேற்ற இந்தியா புலிகளுடன் சமரசப்பேச்சுக்கு மத்தியஸ்துவத்திற்கு முற்படுவதற்கு வாய்ப்பு இருப்பதாக இல்லை. இது இந்தியா சட்டவரம்பிற்கு உட்பட்டதாக இருக்கமாட்டாது.

ஆகையால் சனாதிபதி சந்திரிகா இந்தியாவிடம் ஒத்துழைப்பைக் கோருவதென்பது இராணுவ ரீதியிலானதாகவே இருக்க முடியும். இந்த நிலையில் சனாதிபதி சந்திரிகாவின் பதவிக்காலம் நீடிக்கையில், சமாதானப்பேச்சுவார்த்தைகள் என்பது கேள்விக்குறியாவது தவிர்க்க முடியாததாகவே இருக்கும்.

அதாவது மீண்டும் ஒரு பொதுத் தேர்தலில் சமாதானத் தீர்வை முன்னிறுத்தி ஐ.தே.முன்னணி மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் ஆட்சி அதிகாரத்திற்கு வராதவிடத்து அன்றி சமாதானத்தை வலியுறுத்தி சனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெறாத வரையில் இலங்கையில் சமாதான முயற்சிகள் குறித்து எவரும் திருப்திப்பட்டுக்கொள்ளத்தக்க வகையில் முன்னேற்றங்கள் எட்டப்படுதல் என்பது கடினமாகவே இருக்கும். அவ்வேளையிலும் கூட ஆட்சியாளர்கள் குறிப்பாக, ரணில் இனப்பிரச்சினைக் குத் தீர்வுகாண உளப்பூர்வமாக ஈடுபாடு காட்டுதல் வேண்டும்.

ஜெயராஜ்

# சிறிலங்கா அரசிற்கு இராணுவ உதவியளிப்பதை சர்வதேச நாடுகள் இனியாவது நிறுத்தவேண்டும்

## சமாதானத்துக்கும் நீதிக்குமான ஆணைக்குழு வேண்டுகை

**சர்வதேச நாடுகள் தொடர்ந்தும் சிறிலங்கா அரசாங்கத்திற்கு ஆயுதங்களையும் இராணுவ தளபாடங்களையும் இராணுவ நவீனத்துவப் பயிற்சியையும் வழங்கி அரசின் போர் முயற்சிக்கு ஆக்கமும ஊக்கமும் வழங்குவதை இனியாவது நிறுத்திக்கொள்ள வேண்டும். இவ்வாறு யாழ்ப்பாணத்திலுள்ள சமாதானத்துக்கும் நீதிக்குமான ஆணைக்குழுவின் தலைவரான வண.பிதா ஏ.ஜ.பேர்ணாட் அடிகள் தெரிவித்தார்.**

கடந்த ஞாயிறன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற வடபுல நோக்கில் முரண்பாடும் அபிவிருத்தியும் எனும் தலைப்பிலான ஆய்வுப்பட்டறையில் உரை நிகழ்த்தும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

சமாதான முன்னெடுப்புக்களில் பின்னடைவுகள் நெருக்கடிகள் மேல் கிளம்பியுள்ள இந்நிலையில் சர்வதேச சமுதாயம் என்ன செய்யப்போகின்றது என்பதை அறிவதில் தமிழர் சமுதாயம் மிகவும் அக்கறையாகவுள்ளது.

தென் இலங்கையிலுள்ள ஐக்கிய தேசியக் கட்சிக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குமிடையில் சகவாழ்வு நிலை ஏற்படாதவரை நாட்டின் இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான சமாதானம் ஏற்படமாட்டாது. அவர்களுக்குத் தேசியநலனில் எத்தகைய அக்கறையும் இல்லை. மாறாக கட்சி நலனிலேயே முழு அக்கறையும் உள்ளது.

நாம் அனைவரும் சமத்துவமான உரிமைகள் உள்ள இலங்கைப் பிரஜைகள். இனவாதம் பேசிக்கொண்டு இனத்துவப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிட முடியாது. இலங்கையில் மாறி மாறி வந்த அரசுகள் எவ்விதம் தமிழர்களின் பொருளாதாரம், கல்வி, ஆன்மீகம், அபிவிருத்தி, முதலீடு போன்றவற்றினை அழித்தது என்பது 20 வருடகாலப் போரின் சாட்சியங்களாகவுள்ளன.

இலங்கை அரசுப்படைகள் யாழ்.குடாநாட்டில் யாரைப் பாதுகாக்க நிலைகொண்டுள்ளன. பொது மக்களை என்றால் 70ஆயிரத்துக்கும் அதிகமான பொதுமக்கள் ஏன் கொல்லப்பட்டார்கள் அல்லது நிலத்தைப் பாதுகாக்கவுள்ளார்கள் என்றால் பல ஆயிரக்கணக்கான வீடுகள், கட்டடங்கள், சொத்துக்கள், பனை, தென்னைமரங்கள் ஏன் அழிக்கப்பட்டன? என்று அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

## மகிந்தவை நீக்கக் கோரல்

மகிந்த ராஜபக்சவை எதிர்க்கட்சித் தலைவர் பதவியிலிருந்து நீக்கக் கோரும் சுமார் 25 பேர் அடங்கிய பொ.ஐ. முன்னணி உறுப்பினர்களின் கையெழுத்திட்ட மகஜர் ஒன்றை சனாதிபதியிடம் கையளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக செய்திகள் கூறுகின்றன.

## திலீபன் மருத்துவமனையினரின் விசேட மருத்துவ முகாம்

(அலுவலக செய்தியாளர்)

தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவையினரின் விசேட மருத்துவ முகாம் நேற்று முன்தினம் ஆழிய வளையில் நடைபெற்றது.

அங்கு விசேட மருத்துவ முகாம் அமைக்கப்பெற்று மேற்படி மருத்துவ சேவை வழங்கப்பெற்றது. காலை 10. 30 மணி முதல் பிற்பகல் 4.30 மணி வரை நடைபெற்ற மருத்துவ சேவையில் 59 பேருக்கு பற்சிகிச்சையும், 76 பேருக்கு பொது மருத்துவ சிகிச்சையும் வழங்கப்பெற்றன.

பொது மருத்துவ நிபுணரும் தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவை பல் வைத்தியர்களும் இவ் வைத்திய சேவையினை வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## வைத்திய அதிகாரிகளுக்கான பற்றாக்குறையையிட்டு முறையீடு

(திருமலை)

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு வைத்தியசாலைகளில் வைத்திய அதிகாரிகளுக்கான தட்டுப்பாடு கடுமையாக நிலவுவதாக தெரியவருகிறது.

இந்நிலைமையை வடகிழக்கு மாகாண சுகாதார அமைச்சு தேசிய சுகாதார அபிவிருத்தி அமைச்சின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளது.

வடகிழக்கு மாகாண சுகாதார அமைச்சு வைத்திய அதிகாரிகளுக்கான விண்ணப்பத்தைக் கோரியுள்ளது. ஒரு வருட ஒப்பந்தத்தில் வேலை செய்ய விரும்பும் அங்கீகாரம் பெற்ற வைத்திய அதிகாரிகள் இதற்கு விண்ணப்பிக்கலாம் என மாகாண அமைச்சு கூறுகிறது.

## ஜே.வி.பி. யினருடன் சுதந்திரக்கட்சி கூட்டணி; அதிருப்தியாளர்கள் சதியைக் கண்டறிய ஏற்பாடு

சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஜே.வி.பி.யும் இணைவதற்கு எதிராக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் சதிவேலைகளில் ஈடுபட்டுவருவதாகவும் அவர்களைக்கண்டு பிடிப்பதற்காக இரு கட்சியிலும் முக்கியமானவர்கள் கடும் பிரயத்தனத்தில் ஈடுபட்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தற்பொழுது நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் சம்பந்தமாக பொது இணக்கப்பாட்டிற்கு வரமுற்படும் வேளையில் இச்சம்பவம் நடைபெற்றுள்ளதாக அனுரா பண்டாரநாயக்கவின் ரொஸ்மிட் இல்லத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் தெரிவிக்கப்பட்டது. மங்கள சமரவீர, தினேஸ்குணவர்த்தன, விமல்வீரவன்ச, டிலான்பெரேரா ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

## கொலை, கொள்ளையில் ஈடுபட்ட இராணுவ சிப்பாய்கள் கைது!

(கொழும்பு)

வெலிப்பனை பொலிசார் இரு இராணுவீரர்களை திருட்டுச் சம்பவம் தொடர்பாகக் கைது செய்துள்ளனர்.

ஒரு மாதத்துக்கு முன் முச்சக்கரவண்டி சாரதியைக் கொலை செய்துவிட்டு அவரின் முச்சக்கர வண்டியை அபகரித்தனர் எனவும் தெரிவித்துள்ள நிலைய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மேலும் 3 முச்சக்கரவண்டிகளையும் இவர்கள் இருவரும் திருடியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

மேற்படி இரு இராணுவ வீரர்களும் தப்பியோடிய இராணுவவீரர்கள் எனவும் தெரியவந்துள்ளது.

## கடற்றொழிலாளர் சங்கங்களில் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வடக்குப் பகுதியைச் சேர்ந்த மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வுகள் ஒவ்வொரு கடற்றொழிலாளர் சங்க ரீதியாகவும் மேற்கொள்ளப்படவுள்ளது.

மேற்படி பகுதியில் உள்ள 20 கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதேச எல்லைக்குள் வசிக்கும் பெற்றோர்களை அழைத்து அப்பிரதேச கடற்றொழிலாளர்கள் சங்கத்திலும் வைத்து எதிர் வரும் 21 தொடக்கம் 26ஆம் திகதி வரையான காலப் பகுதிகளில் கௌரவிக்கப்படுவர் என வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசம் அறிவித்துள்ளது. (33)

## புனரமைப்பு

காக்கைதீவின் கடற்கரை ஓர காவல் அரண்களை புனரமைக்கும் நடவடிக்கைகளில் படையினர் ஈடுபட்டுள்ளனர். கடந்த இரு நாட்களாக நடைபெற்று வரும் இந்நடவடிக்கைகளில் கைவிடப்பட்ட காவல் அரண்கள் முட்கம்பி வேலிகளையும் புனரமைத்து வருவதுடன் புதிய புதிய பதுங்குகுழிகளை வெட்டி அவற்றுள் மழைநீர் உட்புகாத வண்ணம் அரண்களும் இட்டு வருகின்றனர். (33)

## சனாதிபதியின் படங்கள் அடித்து நொருக்கப்பட்டன

சிலாபம் அரச மருத்துவ மனையில் தொங்கவிடப்பட்ட சனாதிபதியின் படங்கள் எல்லாவற்றையும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்களால் அடித்து நொருக்கப்பட்டுள்ளதென அரச மருத்துவமனைப் பொலிஸ் அதிகாரி கூறியுள்ளார்.

16 ஆம் திகதி நடந்த ஐக்கியதேசியக் கட்சிப் பொதுக்கூட்டம் முடிவடைந்த பின் கட்சி ஆதரவாளர்கள் அவ்வழியால் செல்லும் பொழுது வைத்தியசாலையில் நுழைந்து இச்சம்பவத்தில் ஈடுபட்டுள்ளார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## சிறந்த கால்நடைப் பண்ணையாளர்களுக்கு பரிசில் வழங்கிக் கௌரவிப்பு

2003 ஆம் ஆண்டுக்கான முல்லைத்தீவுக் கால்நடை வைத்தியர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இடம்பெற்ற சிறந்த கால்நடைப் பண்ணையாளர் தெரிவுப்போட்டியில் பங்குபற்றி வெற்றியீட்டியவர்களுக்குப் பணப் பரிசில்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் முல்லைத்தீவு அரச கால்நடை வைத்தியர் பணிமனையில் வைத்தியக் கலாநிதி சு.கஜறஞ்சன் தலைமையில இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராகப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் தமிழீழ விலங்கு வேளாண்மைத் துறைப் பொறுப்பாளர் ஞானவேல கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றியதுடன் வெற்றி பெற்றவர்களுக்கு உரிய காசோலைகளையும் வழங்கிக் கௌரவித்தார்.

இந்நிகழ்வில் முல்லை மாவட்டப் பொருண்மிய மேபாட்டு நிறுவன விலங்கு வேளாண்மைத் துறை இணைப்பாளர் பாஸ்கரன், கால்நடை அபிவிருத்தி அலுவலர் க.சூரியகுமாரன் ஆகியோரும கலந்துகொண்டு சிறப்புரைகளை ஆற்றினார்கள்.

## தீவகம் புறக்கணிப்பு

யாழ்.தீவகப். பகுதி வைத்திய சாலைகளுக்கு மருந்துப்பொருட்களை அனுப்புவதில் அரசாங்கம் மாற்றான்தாய்மனப்பான்மையைக் கடைப்பிடித்து வருவதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

அண்மைக் காலமாக அரசு கடைப்பிடித்துவரும் இந்நடவடிக்கைகளால் முக்கிய மருந்துப் பொருட்களுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுவதால் நோயாளர்கள் பெரும் அவதிப்பட்டு வருகின்றனர்.

இதேவேளை இவ்வைத்திய சாலைகளில் தற்பொழுது கையிருப்பில் இருக்கும் சொற்ப அளவு மருத்துவப் பொருட்களும் முடிவடையும் பட்சத்தில் வைத்திய சாலைகளை மூடவேண்டிய அபாயமும் தோன்றலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (33)


## தமிழீழ வைப்பகம்

# பணிநிலை வெற்றிடம்

தமிழீழ வைப்பகத்தினால் கீழ்க்காட்டப்படும் பணிநிலைக்குத் தகுதியானவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

**பணி நிலை:-** உத்தியோக உதவியாளர் தரம் :- 03

**தகைமைகள:** க.பொ.த. (சாதாரண தர) தேர்வில் கணிதம் (கணிதம்42/ கணிதம் II), தமிழ் உட்பட 05 திறமைச் சித்தியுடன் குறைந்தது 06 பாடங் களில் ஒரே அமர்வில் தேர்ச்சி பெற்றிருப்பதுடன், க.பொ.த. (உயர்தர) தேர்வில் ஒரே அமர்வில் 03 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

**மாதாந்த ஊதிய அளவுத் திட்டம்** $\frac{3,670\ -5,070}{70\ X\ 20}$ +4,000 (7,670-9,070)

**அகவை எல்லை** :- 19 – 25

வேண்டுகைகள் யாவும் உரிய படிவத்தில் நிறைவு செய்யப்பட்டுக் கடித உறையின் இடப்பக்க மேல் மூலையில் '**ஆட்சேர்ப்புக்கான வேண்டுகை**' எனக் குறிப்பிடப்பட்டு **2003-12-15** ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்பாகக் கிடைக்கக் கூடிய வாறு அனுப்பி வைத்தல் வேண்டும். வேண்டுகைப் படிவங்களையும், மேலதிக விளக் கங்களையும் தமிழீழ வைப்பகத்தின் எல்லாக் கிளைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

**மேலாளர்,**
**ஆளுகைப் பகுதி,**
**நடுவப் பணியகம்,**
**தமிழீழ வைப்பகம்.**

குறிப்பு: நிறைவு செய்யப்பட்ட வேண்டுகைகளை பதிவுத் தபாலில் (மேலாளர், ஆளுகைப் பகுதி, நடுவப் பணியகம், தமிழீழ வைப்பகம், யாழ். சாலை, கரடிப்போக்கு, கிளிநொச்சி – எனும் முகவரிக்கு) நேரடியாகவோ அல்லது தமிழீழ வைப்பகக் கிளைகளினூடாகவோ அனுப்பிவைக்கலாம்.

(சி-8904)



## சிந்தனைக்கு

இலங்கையில் வழக்கில் உள்ள அரசியல் அமைப்பு எப்போதுமே பெரும்பான்மையினரின் ஆதிக்கத்தையே சிறுபான்மையினர் மீது திணித்து வருகின்றது.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை, கிளிநொச்சி. 19-11-2003

## சந்தேகம் கொள்வதில் தவறில்லை!

"பெரும்பான்மைச் சமூகத்தினரால் சிறுபான்மையினர் என்ன பாடுபட்டார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். எனவே, இரு கட்சிகளும் ஒன்றாகச் சேர்ந்தால் என்ன விளைவு ஏற்படுமோ என நாம் ஏன் சிந்திக்கக்கூடாது?" என அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் எழுப்பியுள்ள கேள்வியானது நியாயபூர்வமானது. கடந்த கால வரலாற்றின் பாற்பட்டது.

தேசிய அரசாங்கம் ஒன்று அமைப்பது தொடர்பாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் நிலைப்பாடு குறித்து தெரிவிக்கையிலேயே இக்கேள்வியை அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் எழுப்பினார். சிறுபான்மை இன மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சி என்ற வகையில் தேசிய அரசாங்கம் ஒன்று அமைக்கப்படுவதற்கு மாறானதொரு நிலைப்பாட்டை அமைச்சர் வெளிப்படுத்தியுள்ளமை ஆச்சரியத்திற்குரியதொன்றல்ல.

இலங்கையில் தேசிய அரசாங்கம் ஒன்று அமைக்கப்படுவது பற்றி கடந்த காலங்களில் பேசப்பட்டு வந்திருப்பினும், எவ்வேளையிலும் அது சாத்தியமாகவில்லை. ஆகையினால், தற்பொழுது சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் வேண்டுகோளுக்குச் செவிசாய்க்கப்படுமா? என்பது ஒருபுறம் இருக்க, இது சிறுபான்மை மக்களுக்கு ஏற்புடையதாக இருப்பதற்கு வரலாற்றில் எந்தவிதமான எடுத்துக்காட்டுகளும் இல்லை.

இலங்கையைப் பொறுத்து தேசியம் என்பது என்றுமே பௌத்த - சிங்களவர்களின் தேசியம் என்றே அர்த்தப்படுத்தப்பட்டு வந்துள்ளது. இலங்கைத் தேசியம் என்ற ரீதியில் அணி திரண்டதில்லை. வேறுவிதமாகக் கூறின் பௌத்த- சிங்களவர்கள் ஏனையவர்களை இலங்கைத் தேசியம் என்பதற்குள் அரவணைத்துச் செல்லவில்லை. இதன் காரணமாகவே இலங்கையில் சிறுபான்மை இனங்கள் தமது உரிமைக்காகப் போராட வேண்டிவந்தது.

இலங்கையைப் பொறுத்து அது சனநாயக நாடு என்ற ரீதியின் பெரும்பான்மையோர் ஆட்சி என்பதாக உள்ளது. ஆனால், அடிப்படையில் பெரும்பான்மை இனத்தவர் ஆட்சி என்பதே இலங்கையில் நடைமுறையில் இருந்து வருகின்றது. அதிலும் குறிப்பாக இரண்டு பிரதான கட்சிகளில் ஒன்று பெருவெற்றி பெற்ற காலத்தில் அவர்களின் ஆட்சி என்பது சிறுபான்மையின் உரிமைகளை மறுப்பதாக அவர்கள் மீதான ஒடுக்குமுறையைத் திணிப்பதாகவே இருந்தது.

இதற்குச் சுதந்திரக் காலத்தில் இருந்தே உதாரணங்களைச் சுட்டிக்காட்ட முடியும். அதாவது, மலையக மக்களின் பிரஜா உரிமை, வாக்குரிமை என்பன மறுக்கப்பட்டதில் இருந்து வடக்கு-கிழக்கில் பெரும் போரைக் கட்டவிழ்த்துவிட்டதில் வரையில் உதாரணங்களைக் காட்ட முடியும்.

1972ஆம் ஆண்டு மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான கூட்டணியானது சிறுபான்மை இனத்தவருக்கு அரசியல் யாப்பில் வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பை இல்லாது ஒழித்தது. தமிழ்த் தலைவர்கள் அதற்கு தமது ஆட்சேபத்தைத் தெரிவித்தபோதும் அதனை அன்றைய பிரதம மந்திரியான சிறிமாவோ பண்டாரநாயக்க கண்டுகொள்ளவில்லை.

இதன் பின்னர் 1977இல் ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வந்த ஜே.ஆர். ஜெயவர்த்தன தமது விருப்பத்திற்கேற்ப ஓர் அரசியல் யாப்பை உருவாக்கிக் கொண்டார். இவரது ஆட்சிக் காலத்தில் அரசியல் யாப்பு ரீதியாகவும், இராணுவ ரீயிலும் சிறுபான்மை இனத்தவர்கள் மீது ஒடுக்குமுறை மேற்கொள்ளப்பட்டது.

இந்த வகையில் ஒரு புறத்தில் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை அரச பயங்கரவாதத்தின் மூலம் நசுக்கிவிட முனைந்த அதேவேளை, மறுபுறத்தில் அரசியல் யாப்பு ரீதியிலும் ஒடுக்கு முறை மேற்கொள்ளப்பட்டது. அன்று எதிர்க்கட்சியாக இருந்த தமிழர் விடுதலைக் கூட்டணியினரை அரசியல் யாப்பு ரீதியில் வெளியேற்ற நடவடிக்கை மேற்கொண்டது. இதற்கென அரசியல் யாப்பில் திருத்தங்களும் கொண்டு வரப்பட்டன. அது மட்டுமல்லாது தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை நசுக்கும் நோக்கில் பயங்கரவாதத் தடைச்சட்டம் போன்ற மிக மோசமான சட்டங்களும் நிறைவேற்றப்பட்டன.

இந்த வகையில் ஆட்சி அதிகாரத்தில் சிங்களக் கட்சிகள் பலமாக இருந்தபோது சிறுபான்மையினரின் உரிமைக்கு எதிராகவே அவை செயற்பட்டன. தமது அரசியல் பலத்தைக் கொண்டு தமிழ் மக்களின் உரிமைகளை நசுக்கவே முற்பட்டன. இந்நிலையில், தேசிய அரசாங்கம் ஒன்று அமைப்பது தொடர்பாக ஆளும் கட்சிக்கு சனாதிபதி அழைப்பு விடுத்துள்ளதை சந்தேகக் கண் கொண்டு பார்க்காது இருக்க முடியாது.

ஏனெனில், தேசிய அரசாங்கம் ஒன்றிற்கு அழைப்பு விடுத்துள்ள சனாதிபதி சந்திரிகா இனப்பிரச்சினைக்கு இராணுவ ரீதியில் தீர்வு காணப்படுதல் வேண்டும் என வலியுறுத்தும் ஜே.வி.பி. யுடன் கூட்டணி ஒன்று அமைப்பது குறித்து தீவிரமாக ஆராய்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் சந்திரிகாவின், தேசிய அரசு என்பது பௌத்த - சிங்களவர்களுக்கு உரியதாய் சிறுபான்மை இனங்கள் மீது ஆதிக்கம் செலுத்துவதுமாகவுமே இருக்கும் என எதிர்பார்ப்பதில் தவறில்லை.

# தேசிய அரசை அமைக்கமுன் இனப்பிரச்சினைக்கு தேசிய இணக்கத் திட்டம் தயாரிக்கவேண்டும்

### ஐ.தே.க. பிரதித்தலைவர் கரு ஜெயசூரிய தெரிவிப்பு

தேசிய அரசு ஒன்று அமைக்கப்படும் முன்னர், நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு எது என்ற விடயம் தொடர்பினும், அது முன்னெடுத்துச் செல்லப்படும் நிலை குறித்தும், உறுதியான தேசிய இணக்கத்திட்டம் தயாரிக்கப்படவேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கருஜெயசூரிய தெரிவித்துள்ளார். இலங்கை தொழிற்சங்க அமைப்பினருடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற பேச்சு வார்த்தையின் போது, இந்தக் கருத்தை கருஜெயசூரிய வெளியிட்டார். அதாவது தேசிய அரசை விட தேசிய இணக்கம் அவசியம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது நாட்டின் எதிர்கால முன்னேற்றத்துக்கு கட்சிகளுக்கு இடையிலான ஒற்றுமையை வலியுறுத்திய, இலங்கைத் தொழிற்சங்க அமைப்பினர் இத் தொடர்பில் எதிர்வரும் வியாழக்கிழமை சனாதிபதியை சந்தித்துப் பேசுவதாகவும் குறிப்பிட்டார். (32)

# தெற்காசிய நாடுகளில் எயிட்ஸ் அபாயம் உலக வங்கி அறிக்கையில் எச்சரிக்கை

### - இந்தியாவின் நிலை மோசம்

இலங்கை உட்பட இந்தியா,பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம், பூட்டான், மாலைதீவு, ஆகிய தெற்காசிய நாடுகளில் எயிட்ஸ் அபாயம் அதிகரித்துள்ளதாக உலக வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏனைய தெற்காசிய நாடுகளுடன் ஒப்பிடும்போது இந்தியாவின் நிலைமை மிகவும் மோசமாக உள்ளதெனவும் தெற்காசிய நாடுகளில் எயிட்ஸ் அபாயத்தைக் கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்குரிய காலம் இன்னும் கனியவில்லை எனவும் அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்த நாடுகளில் எயிட்ஸ் அபாயம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படாவிட்டால் எதிர்காலத்தில் தெற்காசிய பிராந்தியம் முழுவதும் எயிட்ஸ் அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் எனவும் அவ்வறிக்கையில் மேலும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

# பிரதமரின் முயற்சிகளுக்கு இடையூறளிக்காது மூன்று அமைச்சுகளையும் மீள ஒப்படைக்குக!

### ஐக்கிய பல்கலை ஆசிரியர் சங்கம் கோரிக்கை

நாட்டின் சமாதானத்தை ஏற்படுத்தவும் நாட்டை கட்டியெழுப்பவும் ரணில் விக்கிரமசிங்க எடுத்துள்ள நடவடிக்கைகளுக்கு இடையூறு அளிக்காமல் மூன்று அமைச்சுக்களையும் மீள ஒப்படைக்குமாறு சந்திரிகா குமாரதுங்கவை ஐக்கிய பல்கலைக்கழக ஆசிரியர் சங்க செயலாளர் கலாநிதி எம்.ஒ.ஏ சொய்சா கூறியுள்ளார். இதற்கான ஆணையை மக்கள் தேர்தல் மூலம் ஐக்கிய தேசிய முன்னணிக்கு வழங்கியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். ஐக்கிய தேசிய முன்னணியினால் முன்னெடுக்கப்பட்ட பொருளாதார அபிவிருத்தி, சமாதான முயற்சிகள் என்பன சனாதிபதியின் செயலால் தடைப்பட்டுள்ளது. நாட்டின் சமாதானத்தையும் ஐக்கியத்தையும், அபிவிருத்தியையும் தொடர்ந்து மேற்கொள்ள 3 அமைச்சுக்களையும், ஐக்கிய தேசிய முன்னணியிடம் வழங்கும்படி சந்திரிகாவை செயலாளர் சொய்சா கேட்டுள்ளார்.

# சிறுபான்மையினரது அரசியல் அந்தஸ்துக்கு தேசிய அரசாங்கம் குந்தகமாக அமையும்

### அமைச்சர் பெ.சந்திர சேகரன் கருத்து

(கொழும்பு)

தேசிய அரசாங்கம் அமைக்கப்படுவது சிறுபான்மையினரது அரசியல் அந்தஸ்துக்கு குந்தகமாக அமையும் என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் அமைச்சருமான பெ.சந்திரசேகரன் கூறியுள்ளார்.

தேசிய அரசாங்கம் அமைக்கப்படும் போது சிறுபான்மைக் கட்சியினரை உள்ளடக்க வேண்டிய அவசியம் ஏற்படாது. சிறுபான்மையினர் மீது அனுதாபப்பட்டு சிறுபான்மைக் கட்சியினரை இந்த அரசாங்கத்தில் இணைக்கலாமே தவிர அதற்கான அவசியம் ஏற்படாது.

இதனால் பாதிக்கப்படுவது சிறுபான்மை மக்களேயாவர் என்றும் அமைச்சர் கூறியுள்ளார். தேசிய அரசாங்கம் அமைப்பது தொடர்பான சனாதிபதியின் கோரிக்கை குறித்து அமைச்சரிடம் கேட்ட போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டாலும் சமாதான முயற்சி விடயத்தில் பரஸ்பர புரிந்துணர்வுடன் இரு தரப்பினரும் செயற்பட முடியாது.

ஐக்கிய தேசியக் கட்சியும், பொ.ஐ.மு.வும் கடந்த தேர்தலில் வெவ்வேறு தேர்தல் விஞ்ஞாபனங்களை முன் வைத்தே மக்களின் வாக்குகளைப் பெற்றன.

எனவே எவ்வாறு இரு தரப்பினரும் ஒன்றாகத் தேசிய அரசாங்கத்தை அமைப்பது என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

# இந்திய அணி விக்கெட் காப்பாளரால் ஆபத்தை எதிர்கொள்கிறது

### - அவுஸ்திரேலிய அணிதுணைத் தலைவர் கருத்து

ஒருநாள் போட்டிகளில் ராகுல் ராவிட்டை விக்கெட் காப்பாளராக செயற்பட வைப்பதன் மூலம் இந்திய அணி ஆபத்தை எதிர்கொள்வதாக அவுஸ்திரேலிய அணியின் துணைத் தலைவர் ஹில்கிரிஸ்ட் தெரிவித்துள்ளார்.

பாத்திவ் பட்டேலை விளையாட வைப்பதில்லை மற்றொரு துடுப்பாட்ட வீரரை அணியில் சேர்க்க வேண்டும் என்பதற்காக அவரை விக்கெட் காப்பாளராக நியமிக்காதது இந்தியாவிற்கு ஆபத்தாகும்.


சில சமயங்களில் நல்லவிதமாக அமையும். ஆனால், சில சமயங்களில் பலனளிக்காமல் போகலாம். விக்கெட் காப்பாளராக பணியாற்றுபவர் விரும்பிச் செய்கிறாரா என்பதை நோக்க வேண்டும்.

இந்த விடயத்தில் நிர்வாகம் கவனம் எடுக்கவேண்டும் என்று கல்கத்தாவில் நடைபெற்ற இறுதிக் கிரிக்கெட் போட்டிக்கு முன்பு ஹில்கிறிஸ்ட் கூறியுள்ளார்.

# விமர்சனத்திற்கு கனடா வருத்தம்

2010ஆம்ஆண்டு பொதுநலவாய விளையாட்டு விழாவை நடத்தும் உரிமையை இந்தியா பெற்ற விதம் குறித்த தமது விமர்சனத்திற்குக் கனடா மன்னிப்புக் கோரியுள்ளது. இப் போட்டிகளை நடத்துவதற்குரிய உரிமை வழங்கப்பட்டால் அங்கத்துவ நாடுகளைச் சேர்ந்தோருக்கான புலமைப் பரிசிலுக்காக 38லட்சம் டொலர்களைச் செலவிடத்தயார் எனக் கனடா அறிவித்தது. அதன் பின் தாம் ஒவ்வொரு அங்கத்துவ நாட்டுக்கும் ஒரு லட்சம் டொலர் வீதம் 72லட்சம் டொலர்களை வழங்கத்தயார் என இந்தியா அறிவித்தது. அதன் பின் நடைபெற்ற வாக்கெடுப்பில் இந்தியா 46-22 விகிதத்தில் வென்றது.

இது குறித்துக் கனேடியக் குழுவினர் காரசாரமான கருத்துக்களை வெளியிட்டிருந்தனர். எனினும் இச் சம்பவத்திற்காக கனேடிய அமைச்சர் வருத்தம் தெரிவித்துள்ளார்.



# சனாதிபதி சந்திரிகாவிடம் எவ்வாறு நியாயத்தை எதிர்பார்க்க முடியும்?

## ஜோசப் பரராஜசிங்கம் பா.உ. கேள்வி

சனாதிபதி சமாதானத்தின் மேல உண்மையான அக்கறை இருந்தால் 2001ஆம் ஆண்டு நான்கு மாதம் விடுதலைப்புலிகள் ஒரு தலைப்பட்சமாக யுத்த நிறுத்தத்தை அறிவித்தபோது அதனை ஏற்றுக் கொண்டு யுத்த நிறுத்தத்தை செய்து பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்திருக்க வேண்டும். ஆனால், விடுதலைப்புலிகள் யுத்த நிறுத்தம் செய்த போது அதை உதாசீனம் செய்து யுத்தத்தை நடத்திய சனாதிபதியிடம் எப்படி நியாயத்தை நாம் எதிர்பார்க்க முடியும் என பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் கேள்வி எழுப்பியுள்ளார்.

நேற்று முன்தினம் மட்டக்களப்பில் நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சமாதான முயற்சியோடு பின்னிப்பிணைந்த படைத்துறை அமைச்சு பிரதமரிடம் இல்லாத போது சமாதானத்தை முன்னெடுக்க முடியாதுபடைத்துறை அமைச்சை பிரதமரிடம் ஒப்படைத்தால் மட்டுமே சமாதான முயற்சிகளை முன்னெடுக்க முடியும். சமாதானம் மலரவேண்டும் என்பதில் விடுதலைப்புலிகள் உறுதியாக உள்ளனர். இதனைத் தலைவர் பிரபாகரன் உறுதியாகக் கூறியுள்ளார்.

விடுதலைப்புலிகள் சமாதான முயற்சிகளுக்கு வரமாட்டார்கள். அவர்கள் யுத்தம்தான் செய்வார்கள் என்ற கருத்தினை உலக நாடுகள் இன்று ஏற்கத் தயாரில்லை. விடுதலைப்புலிகளைப் பற்றி உலக நாடுகள் தற்போது உணர்ந்து கொண்டுள்ளன. தென்பகுதி அரசியல் தலைவர்களின் கையில் சமாதானத்தை முன்னெடுப்பதற்கான பொறுப்புக்கள் உண்டு. தவறும் பட்சத்தில் போர் நிறுத்தம் தொடருமா என்பது கேள்விக்குறியே. போர் நிறுத்தம் தொடர வேண்டுமாயின் சமாதான முயற்சிகள் தொடரவேண்டும்.

சமாதான முயற்சியைத் தொடர்வதற்கான வல்லமையும் இதய சுத்தியும் சனாதிபதியிடம் இல்லை. யுத்தத்தின் மூலம் பிரச்சினையைத் தீர்க்கலாம் என்றே பெரும்பான்மை சமூகமும் கடந்த கால அரசாங்கங்களும் நம்பின. ஆனால், அதில் அவர்கள் தோல்வி யடைந்துவிட்டார்கள். யுத்தம் இன்றி பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்பதற்காகவே பிரபாகரன் போர் நிறுத்த உடன்படிக்கையில் கையொப்பமிட்டார் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (32)

# மாவீரர் குடும்ப ஊழியர்களை கௌரவிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், நல்லூர் ஆகிய பிரதேச செயலகங்களிலும் யாழ் மாநகர சபையிலும் பணிபுரியும் மாவீரர் குடும்பங்களைச் சேர்ந்த ஊழியர்களை கௌரவிக்கும் நிகழ்வு இன்று அவ்வவ் அலுவலகங்களால் மிகச்சிறப்பாக நடாத்தப்பெறவுள்ளது.

இக்கௌரவிப்பு நிகழ்வுகளில் 150க்கு மேற்பட்ட பெற்றோர்கள் கௌரவிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# ரி.வி.எஸ். கிண்ணத்தை அவுஸ்திரேலியா வென்றது

(கொல்கத்தா)

இந்தியாவில் நடைபெற்ற முத்தரப்பு கிரிக்கெட் போட்டியில் ரி.வி.எஸ். கிண்ணத்தை அவுஸ்திரேலிய அணி சுவீகரித்துக்கொண்டது.

நேற்று கொல்கத்தாவில் ஈடன்கார்டனில் இந்திய அணியுடன் நடைபெற்ற பகல்-இரவான இறுதிப்போட்டியில் 37 ஓட்டங்களால் அவுஸ்திரேலிய அணி வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 50 ஓவர்களில் 5விக்கெட்டுகளை இழந்து 235 ஓட்டங்களைப் பெற்றது. மார்ட்டின் 61ஓட்டங்களையும், மைக்கல் கிளஸ்க், மைக்கல் பேவன் ஆட்டமிழக்காது முறையே 44,40 ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 41.5 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 198ஓட்டங்களை மட்டுமே பெற்றது. அணித்தலைவர் ட்ராவிட் 49 ஓட்டங்களையும் டெண்டுல்கர் 45ஓட்டங்களையும் பதானி 30ஓட்டங்களையும் பெற்றனர். இயர்ஹர்வி 21 ஓட்டங் களுக்கு 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

நேற்றைய ஆட்டநாயகனாக அவுஸ்திரேலிய அணியின் மைக்கல்கிளிக் (ஆ.இ.44 ஓட்டம், 2விக்கெட்) தெரிவானார். தொடரின் சிறப்பாட்டக்காரராக சச்சின் டெண்டுல்கர்(466 ஓட்டங்கள்) தெரிவானார்.

# நல்லூர் பகுதியில் குழுமோதல் குளிர்களி நிலையம் மீது தாக்குதல்

## பெருமளவு கலகமடக்கும் பொலிசார் குவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நல்லூர் பகுதியில் ஏற்பட்ட குழுமோதலால் குளிர்களி நிலையம் ஒன்று அடித்து நொருக்கப்பட்டுள்ளதுடன் பாதுகாப்பிற்காக அப்பகுதியில் ஏராளமான கலகம் அடக்கும் பொலிசார் குவிக கப்பட்டதனால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. நேற்றைய தினம் நடைபெற்ற இச் சம்பவம் பற்றி தெரியவருவதாவது, மேற்படி குளிர்களி நிலைய ஊழியர் ஒருவரை நிலையத்தின் உரிமையாளர் தாக்கியதால் எழுந்த இக்குழு மோதலினாலேயே இப்பரபரப்பு ஏற்பட்டுள்ளது. இதேவேளைஇச்சம்பவத்தில் காயமுற்ற இருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(33)

## பொது அறிவுப் போட்டி

சமூகக்கல்வி பொது அறிவுப் போட்டி-2003 வலய மட்டப் போட்டியில் வெற்றியீட்டிய துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான மாகாண மட்டப் போட்டியானது மு/மாங்குளம் மகாவித்தியாலயத்தில் வரும் 23-11-2003 அன்று காலை 9.00 மணிக்கு நடைபெறும் என வலயக் கல்விப் பணிப்பாளர் சு. பரந்தாமன் தெரிவித்துள்ளார்.

# இங்கிலாந்து தோல்வி

நேற்று தம்புள்ளவில் நடைபெற்ற இங்கிலாந்து அணியுடனான முதலாவது ஒருநாள்போட்டியில் சிறிலங்கா கிரிக்கெட் அணி10 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 46.1ஓவர்களால் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 88ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சிறிலங்கா அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்கள் சனத்ஜெயசூரியா ரொமேஸ் களுவிதாரைண ஆகியோர் 13.5ஓவர் களில் வெற்றி இலக்கை எட்டினர்.

# ஜெயலலிதா தொடர்பான வழக்கு கர்நாடக நீதிமன்றத்திற்கு மாற்றம்

## இந்திய உச்ச நீதிமன்றம் உத்தரவு

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா வருமானத்திற்கு அதிகமாக சொத்துக்கள் சேர்த்தார் என்ற குற்றச்சாட்டுக்கள் குறித்து நீதிமன்றில் நடந்து கொண்டிருக்கும் வழக்குகளை கர்நாடகத்திற்கு மாற்றுமாறு இந்திய உச்ச நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

ஜெயலலிதா முதல்வராக ஆட்சியேற்ற பிறகு 76 சாட்சிகள் திருப்பி அழைக்கப்பட்டன. அதில் 64 சாட்சிகள் திரும்பி பெற்றுக் கொள்ளப்பட்டன. வழக்கறிஞர் வழக்குகளை திருப்பிப் பெற்றமை பற்றி நீதிபதியிடம் சுட்டிக்காட்ட மறுத்துவிட்டார். இது தவறு என்றும் வழக்கின் போக்கிலேயே பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் இந்த வழக்குகள் தொடர்ந்து சென்னை நீதிமன்றத்தில் நடைபெற்றால் இவ் வழக்கில் நியாயமான நீதி கிடைக் காதென்றும் நீதிபதிகள் காரணம் கூறினார்கள். கர்நாடக நீதி மன்றத்தில்கர் நாடக தலைமை நீதி பதி, சிறப்பு நீதிபதியை ஒரு மாதத்திற்குள் நியமனம் செய்ய வேண்டுமென்றும் அரச வழக்கறிஞரை 6 வாரங்களுக்குள் நியமனம் செய்ய வேண்டுமென்றும் தமிழக நீதிமன்றம் இது சம்பந்தமான அனைத்து ஆவணங்களையும் 6 வாரத்திற்குள் சிறப்பு நீதிமன்றத்துக்கு அனுப்பி வைக்க வேண்டுமென்றும் அதன் பிறகு வழக்குகள் தினந்தோறும்நடைபெற வேண்டுமென்றும் அவ்வாறு வழக்கு நடைபெறும் போது ஜெயலலிதா, சசிகலா, திவாக ரன், இளவரசி, தினகரன் ஆகிய 5 பேரும் தினந்தோறும் சாட்சியளிக்க கோட்டிற்கு நேரில் ஆஜராக வேண்டுமென்றும் வழக் கறிஞர்கள் மூலமாக ஆஜராகக் கூடாதென வும் திட்டவட்டமாக தலைமை நீதிபதி கூறியுள்ளார் இந்த வழக்கு எவ்வளவு விரைவில் முடிக்க முடியுமா அவ்வ ளவு விரைவில் முடிக்க வேண்டு மென்றும் அந்த சிறப்பு நீதிப திக்கு உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.

# தாயின் தவறான நடத்தையால் 3 குழந்தைகளுக்கு நடந்த அவலம்

மனைவியின் தவறான நடத்தையால் அவமானமடைந்த கணவனொருவர் தனது மூன்று பிள்ளைகளுடன் தற்கொலை செய்து கொள்ள முற்பட்டுள்ளார்.

எனினும் அவரது மூன்று குழந்தைகளும் உயிரிழந்த நிலையில் அவர் மட்டும் மீட்கப்பட்டு யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில், குறித்த நபர் காரைநகர்பகுதியில் பேக்கறி ஒன்றை வைத்து நடத்தி வந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது அப் பேக்கறியில் பணியாற்றி வந்த இளைஞன் ஒருவருக்கும் பேக்கரி உரிமையாளரது மனைவிக்கும் இடையே தவறான உறவுகள் இருந்தமையை அவர் கண்டுபிடித்துள்ளார்.

இதனால் அவமானமடைந்த அவர் நேற்று முன்தினமிரவு தனது மூன்று குழந்தைகளையும் கிணற்றினுள் தூக்கிப் போட்டு விட்டு தானும் தற்கொலை செய்ய கிணற்றுள் குதித்துள்ளார்.

எனினும் அயலவர்களால் அவர் மட்டும் மீட்கப்பட்ட போதும அவரது மூன்று குழந்தைகளும் உயிரிழந்து விட்டனர்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் பிரேத அறையில் இம்மூன்று சிறார்களதுசடலங்களும் கையளிக்கப்பட்டுள்ளன.

சம்பவ இடத்திற்கு நேரில் விஜயம் செய்த ஊர்காவற்துறை நீதவான் மரண விசாரணைகளை மேற்கொண்டுள்ளதுடன் தலைமறைவாகியுள்ள குழந்தைகளின் தாய் மற்றும் குறித்த இளைஞரை கைது செய்ய பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார். இறந்த குழந்தைகள் வினோவதினி (5வயது), யதுசாலினி (4வயது), கீர்த்தனா(8மாதம்)ஆகியோராவ ர்.(33)

## மாவீரர்...

யுள்ளார்.

இதனைக் கேள்வியுற்ற மக்கள் இராணுவத்தின் தடையையும் மீறி வீதிவளைவுகளை நேற்று மாலையே மீண்டும் கட்டியுள்ளனர். (33)

# காணாமற்போன வயோதிபப் பெண் சடலமாகக் கரை ஒதுங்கினார்

(வல்வை)

தொண்டமனாறு கடல் நீரேரிப் பகுதியில் பழுதடைந்த நிலையில் கரையொதுங்கிய பெண்ணொருவருடைய சடலம் நேற்று முன்தினம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கரவெட்டிப் பகுதியைச் சேர்ந்தவரென தெரிவிக்கப்படும் கிட்டினன் பொன்னம்மா (72வயது)எனும் இப்பெண்மணியின் சடலம் வல்வெட்டித்துறைப் பொலிசாரால் மீட்கப்பட்டு வல்வெட்டித்துறை அரசினர் வைத்தியசாலையில் கையளிக்கப்பட்டுள்ளது. (27)

## சனாதிபதி..

முற்பகல் 10.45 தொடக்கம் மதியம் 12.40 வரை நடைபெற்றபேச்சுவார்த்தையில் பிரதானமான பிரச்சினைகளில் இணக்கப்பாடு எவையும் எட்டப்படவில்லை. தாம் தேசிய அரசு ஒன்றை அமைக்கப்போவதாகவும் அதற்கு பிரதமரின் ஆதரவு வேண்டும். என்று சனாதிபதி கேட்டுக்கொண்டார் நாடாளுமன்றில் தமக்கு முழுமையான பலம் இருப்பதால் தேசிய அரசு ஒன்றிற்கு அவசியமில்லை முதலில் பொறுப்பேற்கப்பட்ட மூன்று அமைச்சுக்களையும் மீண்டும் ஒப்படைத்தால் தேசிய அரசு தொடர்பில் யோசனை செய்யலாம் என பிரதமர் கூறியுள்ளார்.

இதனையடுத்து தாம் அடுத்த கட்ட நடவடிக்கையை மேற்கொள்ளப்போவதாக சனாதிபதி பிரதமருக்குத் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் நேற்றைய பேச்சுவார்த்தை முடிவடைந்துள்ளது. (32)

## ஐ.தே.க...

சியுறும் அபாயம் ஏற்பட்டுள்ளது. எனவே இதை புனர் நிர்மாணம் செய்ய சமாதான முன்னெடுப்பு மேற்கொள்ளப்பட வேண்டும். அதற்காக சமாதான முன்னெடுப்பைக் கொண்டு செல்லக் கூடிய முழுமையான அதிகாரம் மீண்டும் தம்மிடம் வழங்கப்பட வேண்டும் அல்லது தற்போதுள்ள அதிகாரத்தைக் கொண்டு சனாதிபதி சமாதானப் பேச்சை முன்னெடுத்துச் செல்லவேண்டும் என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, சனாதிபதியின் தேசிய அரசு தொடர்பிலும் அரசாங்கம் மேலும் முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலும் பரிந்துரைகளைச் செய்வதற்காக பிரதமரால் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இதில் மு. காங்கிரஸ், இ.தொ. காங்கிரஸ் மற்றும் ம.ம. முன்னணி ஆகியவற்றிலிருந்து தலா இரு பிரதிநிதிகளைக் கொண்டு இக்குழு அமைக்கப்பட்டுள்ளது. (32)

## வரவு...

டிசம்பர் 18ஆம் திகதி நடைபெறவிருக்கிறது.இதே வேளை வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அமைச்சர் கே.என். சொக்ஸியினால் கொழும்பு தாஜ்சமுத்திர விடுதியில் விருந்துபசாரம் நடத்தப்பெறவிருக்கிறது. இதில் அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்டம் தொடர்பாகவும் எதிர்காலத்திட்டம்குறித்தும் விரிவான விளக்கம் அளிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (32)

## வவுனியாவில்...

இதேவேளை 21ஆம் திகதி தொடக்கம் 27ஆம் திகதி வரை வவுனியாவில் உள்ள பொது அமைப்புக்கள் ஈச்சங்குளம் மாவீரர் துயிலும் இல்லச் சுற்றாடலிலும் வவுனியாவில் உள்ள பொது இடங்களிலும் சிரமதானப் பணிகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் மாவீரர் தின நினைவு வீதி வளைவுகள் தயார் செய்யப்பட்டுள்ளதாகவும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர். (13)

## பாதுகாப்பு...

வேண்டுமென சனாதிபதி பரிந்துரை செய்ததாகக் கூறினார். இந்தப் பாதுகாப்பு உயர் சபையில் சனாதிபதி பிரதமர் உட்பட பாதுகாப்பு உயர் அதிகாரிகள் அங்கம் வகிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்படும் என்றும் சரத் அமுனுகம குறிப்பிட்டுள்ளார்.அவசர காலச் சட்டம் தொடர் பில் சனாதிபதி இறுதிக் கையொப்பம் எதனையும் இடவில்லை. அதற்கான ஆரம்ப நடவடிக்கைகளே மேற்கொள்ளப்பட்டன. ஊடகங்கள் இந்த விடயத்தை வெளியிட்ட போதும் உலகம் முழுவதும் அவசரகால நிலை பிரகடனம் தொடர்பில் செய்தி வெளியான போதும் சனாதிபதி செயலகம் சுமார் 3நாட்கள் வரை மௌனம் சாதித்தமை தவிர்க்க முடியாத தவறு என்பதையும் சரத் அமுனுகம ஏற்றுக்கொண்டார்.மக்கள் விடுதலை முன்னணிக்கும் பொதுசன ஐக்கிய முன்னணிக்கும் இடையில் கொள்கையளவில் கருத்து ஒற்றுமை ஏற்பட்டுள்ளது. இதனடிப்படையில் உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்படவுள்ளது என குறிப்பாக அவர் அரசாங்கம் தனது வரவு செலவுத் திட்டத்தில் வற்வரியினை குறைக்க வேண்டும் எனவும் இத்துறைக்கு நிதி ஒதுக்கீட்டை அதிகரிக்க வேண்டும் எனவும் பொது சன முன்னணி எதிர்பார்த்திருப்பதாகக் கூறினார்.நாட்டின் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளமையால் பொலிசார் அரசியல் வாதிகளின் இடையூறுகளுக்கு இடம் கொடுக்காது செயற்பட வேண்டுமென சனாதிபதி உத்தரவிட்டுள்ளதாகவும் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

## மத்தியஸ்தத்தில்...

மென சனாதிபதியையும் பிரதம மந்திரியையும் வலியுறுத்தி வேண்டுகிறோம்.எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.